
www.padippakam.com

# முங்காரி

இருமொழி சமூக இலக்கிய மாத இதழ்



என்றோ இம் மண்ணைக் காத்த வீரர்கள்.
இன்னும் இம் மண்ணின் மாந்தர் மனதில்
கொலுவேறிய தெய்வமாய் கும்பிடப் பட்டு
கோலோச்சும் கிராமிய தேவாதி தேவர்கள்!

படம் : வா.மு. கோமு

11

ஏப்ரல் 2000

படிப்பகம்

www.padippakam.com

நாளைய வரலாறு நல்லதாய் அமைய
ஏற்றவை சொல்வதே எங்கள் பணியாம்

காண்டம் : 2 ★ ஏப்ரல் 2000 ★ படலம் :2


# முங்காரி

இரு மொழி மாத இதழ்

ஆசிரியர்
குன்றம் மு. இராமரத்நம்

பொறுப்பாசிரியர்
அ. இரவீந்திரன் (வாமனன்)

ஆசிரியக் குழு
கு.வே.கி. ஆசான்
தி.க. சிவசங்கரன்
சரோஜினி பாக்யமுத்து
தி. கமலி கஜேந்திரன்

அச்சகம்
உறவு அச்சகம்
புலமைப் பண்ணை
கோவை – 7

முகவரி :
புலமைப்பண்ணை
சுகர்கேன் அஞ்சல்
கோவை – 641 007
போன் : 472777

தனியிதழ் ரூ. 5
ஆண்டுச் சந்தா ரூ. 50
ஆயுள் சந்தா கிடையாது


## உள்ளே . . .


| | |
|---|---|
| ஆசிரியவுரை | 3 |
| சிறுகதை – வா.மு. கோமு | 4 |
| நாட்டுப்புற வழக்கு – கழனியூரன் | 12 |
| கவிதைகள் | |
| விக்ரமாதித்யன் | 14 |
| மா. செல்வராஜ் | 14 |
| தி. கமலி | 14 |
| சீ.பெ. முத்துக்குமரன் | 15 |
| கம்பம் மாயவன் | 15 |
| வாமனன் | 16 |
| பாட்டாளி | 16 |
| S. அறிவுமணி | 16 |
| ஏர்க்கிழார் | 17 |
| நா. சுப்புலட்சுமி | 18 |
| சிற்பி | 19 |
| சாந்தாதத் | 21 |
| கடிதம் - வாசகர் | 22 |
| ஆங்கிலப்பகுதி | |
| கு.வே.கி. ஆசான் | 24 |
| சுவாமி சுந்தரானந்தா | 26 |
| K. வெங்கிடாச்சாரி | 27 |
| நூலரங்கம் | 28 |
| கட்டுரை | 32 |
| அனிச்சமலர் வாசகர் திரு.வி.கே. துரையன் | 34 |
| சிற்றிதழ் வளாகம் | 36 |
| வாசகர் மேடை | 37 |
| மேலும் சில | |


படிப்பகம்

www.padippakam.com



# வாழ்த்துக்களோடு சில வார்த்தைகள்

வாழ்த்துக்கள்.. அன்பு வாசக நேயர்களே!

இம்மாதம் அச்சுத்தாள் 20 சதவீதம் உயர்ந்திருக்கிறது. தபால் சலுகையும் இன்னும் கிடைத்த பாடில்லை. இந்த நிலையிலும் நம் இதழ் வெளிவந்திருக்கிறது உங்கள் மீது கொண்ட அன்பால் நம்பிக்கையால்.

இவ்விதழிலிருந்து தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் தமிழ் இருக்கை கொண்ட பிறமாநிலப் பல்கலைக் கழகங்களின் நூலகங்களுக்கு முங்காரி இலவசமாக அனுப்பப்படுகிறது. அடுத்து தமிழகத்திலுள்ள அனைத்துக் கல்லூரி நூலகங்களுக்கும் அனுப்புவது என்ற ஆசையும் திட்டமுமிருக்கிறது. இதையெல்லாம் நடைமுறைப்படுத்த வாசக அன்பர்கள் கொஞ்சம் உதவினால் நல்லது. வணிக - தொழிலதிபர்கள் விளம்பரம் தந்து உதவலாம். வள வசதியுள்ளவர்கள் நன்கொடை தரலாம். குறைந்தபட்சம் சந்தாதாரராகி வலுச்சேர்க்கலாம். சந்தாதாரர் தவறாமல் சந்தாவைப் புதுப்பித்து உதவலாம். எல்லோரும் எல்லாம் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

நம்மொழி வளம் குறித்து எண்ணும்போது, பிறமொழி சரக்குகளின் இறக்குமதி அதிகமாயும், ஏற்றுமதி அற்பமாயும் உள்ளது. இதை ஓரளவு சமநிலைபடுத்துவது மொழியுறவுகளுக்கு உகந்தது. ஆக ஆங்கிலவழி பிறமொழி நல்லனவற்றை தமிழில் பேராசிரியை சரோஜினி பாக்கியமுத்து அவர்களும், தமிழிலுள்ள நல்ல படைப்புக்களை ஆங்கிலத்தில் பேரா. தி. கமலி கஜேந்திரன் அவர்களும் தருவார்கள். ஆசான் வள்ளுவத்தை தொடர்ந்து ஆங்கிலத்தில் தருவார்கள். திகசி முங்காரியின் தரத்தைக் கண்காணிப்பார்கள். இவர்களின் ஒத்துழைப்பில் முங்காரி மேலும் உங்கள் அன்பை - அபிமானத்தை - ஆதரவைப் பெறும் என்ற நம்பிக்கையோடு, மீண்டும் வாழ்த்தி விடை பெறுகிறேன்.

உங்கள் அன்பு
குன்றம் மு. இராமரத்நம்



படிப்பகம்

www.padippakam.com

*சிறுகதை*

# விளை விதைத்தவன்

– வா.மு.கோமு

கதிர் அறுப்புக் காலம் நல்லாம்பட்டியில் துவங்கிவிட்டது. பத்து கிராமங்களில் கடந்த இரு வாரகாலமாகவே கதிர் அறுப்பு துவங்கிநடந்து கொண்டிருக்கிறது. நல்லாம்பட்டி பண்ணையாருக்கு கீழே விழுந்தாலும் மண்ணே ஒட்டலை என்கிற மாதிரி உள்ளூர் ஆட்கள் கூட தன் பண்ணைக்கு அறுப்புக்கு வரவில்லைதான் என்றாலும் தன் வலது கையாளான மல்லியை மிரட்டிக் கொண்டிருந்தார்.

"சாமி, நான் ஊர் ஊரா போயி அறுப்புக்கு ஆள் கூப்பிட்டுப் பார்த்துட்டனுங்க . . அவிங்க அவிங்க ஊர்லயே அறுப்பு நடக்கறதாலே இவ்ளோ தூரம் வரலைங்கறாங்க வேணுன்னா அவிங்க ஊர் அறுப்பு முடிஞ்ச பொறவு வர்றாங்களாமா சாமி".

"ஏண்டா இதச் சொல்றதுக்குத்தான் என் முன்னால வந்தியா?"

"என்னுங்சாமி நான் பண்ணுறது? ஊர்ல அல்லாருமே அவனவன் பஞ்சம் பொழைக்க டவுனுக்குப் போயிட்டு இருக்கானுங்க . . டவுனுல எந்த வேல செஞ்சாலும் கூலி சாஸ்தியாம். எம்பட மச்சனங்கூட டவுனுக்கு காரவேல செய்யப் போறானுங்சாமி. வாரமானா சொளையா பணங் கொண்டாறான்.

"ஓஹோ, அப்ப நீயும் போறன்னு சொல்றியா?"

"நமக்கெதுக்குங்சாமி அந்த வேலையெல்லாம். ஒரு பேச்சுக்கு சொல்றனுங்க. இந்த மாதிரி ஊர் நெலமே இருக்குதுங்க" . .

"நாளுக்கு கூலி தலைக்கு ரெண்டு ரூவா சேத்துத் தாரதா சொல்லிப்பாக்கறது."

"அப்பிடித்தானுங்சாமி போனதபா சொல்லி ஆள் கூட்டிட்டு வந்தன. நீங்க தரமாட்டேன்ட்டீங்க. அவுனுவ சாபம் உட்டுட்டுப் போறானுவ. இருந்தாலும் சாமி நீங்க பொறுக்கித் திங்கற கோழிக்கு மூக்கத் தறிச்சாப்ல பண்ணிப் புட்டீங்கள்ள" . .

"டேய் நீ என்ன அவுனுவ பக்கம் பேசிட்டு இருக்குற? என்னதான் இருந்தாலும் அந்த நாறப்புத்தி உனக்கும் போக மாட்டிங்குதுடா . . . பண்ணைல கதுரு நல்லா காஞ்சி போயி இருக்குது. உட்டம்னு வெச்சுக்க உதிர்ந்து போயிரும். காட்டுக்குள்ளாரவே அப்படி முருகலாக் கெடக்குது! வெதச்சவனுக்குத்தான்டா அந்த கஷ்ட நஷ்டம் தெரியும். உன்னட வழுவுல என்னதாஞ் சொல்றானுக?"

"என்னெய அடிக்க வர்றானுக சாமி. நெறையாப் பேசிப் பழகிட்டானுக. எல்லாஞ்சொன்னா உங்களுக்கு கோவம் வருமுங்க."

"சரி சரி அவுனுக எக்கேடோ கெட்டு நாசமாப் போவுட்டும். நீ இப்பவே முருகம்பாளையம் போயிப்பாரு. வெளியூர்ல இருந்து நிறைய கூலியாட்க எல்லாம் வந்து குமிஞ்சிருக்காங்களாம். இப்பத்தாம் மேலப்பட்டி ராமசாமி வந்து சொல்லிட்டுப் போனான். நீ என்ன சொல்லி அவுனுகள கூப்புட்டு வந்தாலும் சரி. எனக்கு நாளைக்கு அறுப்பு பண்ணைல நடந்தேயாவணும்". "நீ கௌம்பு" துரத்தினார் அவர்.



படிப்பகம்

www.padippakam.com

வாசலுக்கு வெளியே கழட்டி விட்டிருந்த டயர் செருப்பை மாட்டிகிட்டு தரக் தரக்கென்று இழுத்துக் கொண்டு நகர்ந்தான். பின்வாசல் வழியாய் தோட்டத்தை ஒட்டிப் போகும் இட்டேறியில் நடக்கும்போது காதில் செருவி வைத்திருந்த பாதி மல்லிசேரி பீடியை பற்ற வைத்துக் கொண்டான். அருகாமை வேலியிலிருந்து மொசல் ஒன்று கிளம்பி தலைதெறிக்க ஓடியது கிழக்கே. அறுப்பு முடிந்ததும் வேலியில் அங்கங்கே கம்பிக் கன்னிகள் செருவவேண்டும் என யோசனை செய்தான். முயல் கறி இவனுக்கு மிக பிடித்தமானது! ஒவ்வொரு துண்டையும் நன்றாக சக்கையாக மென்று விழுங்குவான்.

பண்ணையாருக்கு உள்ளூரிலோ அல்லது அருகாமை ஊர்களிலோ அறுப்புக்கு இந்த முறை ஆள் கிடைப்பது சிரமம்தான். பண்ணையார் கருமி. அவ்வளவு சீக்கிரம் கூலி தந்துவிடமாட்டார்தான். இவரைப்பற்றி அவர்களெல்லாம் சுத்தமாகவே தெரிந்து வைத்திருந்தார்கள். அதுவுமின்றி கொஞ்சம் சபலப்புத்திக்காரர். பெண்களை அதுவும் கீழ்ஜாதி என்றாலும் அந்த விசயத்திற்காகப் பார்க்கமாட்டார். ஆசை, பயம், ஜாதி அறியாது என்பார். அதனாலும் வேறு வெளியூர் பெண்கள் அவரிடம் வேலைக்கு வரப் பயப்பட்டார்கள். பண்ணையாரின் உருட்டல் மிரட்டல் எல்லாம் மல்லியிடம் மட்டும்தான். அவன் ஒருவன்தான் அவர் மிரட்டலுக்கெல்லாம் பணிந்துபோவான். பண்ணையார் உள்ளூர் கோவில் மணியம் பார்த்தர்ர். ரேடியோ வசூல் பணத்தை ஸ்வாகா, பண்ணியதாய் உள்ளூர்காரர்கள் கூறி மணியத்தையும் பிடுங்கிக் கொண்டனர். அதற்காகவெல்லாம் வருத்தப்படும் மனிதருமல்ல அவர்.

மல்லி ஊஞ்சப்பாறைக்குள் இறங்கி நடந்தான். அங்கங்கே மட்டும் தண்ணீர் தேங்கி நின்றிருந்தது. தேங்கி நின்ற தண்ணீர் ஓரமாய் நண்டுகள் ஊறித் திரிந்த காலடித் தடங்கள் தெரிந்தன. வெயில் சுள்ளென ஏறும் இந்த சமயத்தில் அவைகள் வங்குகளுக்குள் தான் கிடக்கும்.

இவன் முருகம்பாளையம் வந்து சேர்ந்தபொழுது பண்ணையார் சொன்னது மாதிரியான ஆட்கள் யாரும் இவன் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. பொய்யான்தான் ஊருக்குப் பக்கமாக ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். பொய்யான் இவனுக்கு சொந்தக்காரன். இவன் அவனிடம் தன் நிலைமையைச் சொல்லி பண்ணையார் ஆள் கூட்டிவராமல் வராதே என்று சொன்னதையும் சொன்னான். "இங்கெல்லாம் அறுப்பு முடிஞ்சு ஒரு வாரமாச்சு. ஆனால் துளுக்கம்பாளையம் பெரிய புளியமரத்துக்கு அடியில ஒரு கூட்டம் காலைல சோறாக்கிட்டு இருந்ததப் பார்த்தன். ஒரு வேளை அவங்க காடை குருவி புடிக்கிற கூட்டமா இருந்தாலும் இருக்கலாம். ஒன்னுஞ் சரியாப் பாக்கல" என்றான் பொய்யன். இவன் துளுக்கம்பாளையத்துக்கு நடந்தான். பொய்யான் சொன்ன புளியமரம் துளுக்கம்பாளையத்திற்கு முன்பாகவே சாலையோரத்தில் இருக்கிறது. அது பஸ் நிற்கும் இடமும் கூட. இங்கிருந்து மூன்று ஊர்களுக்கான பாதை பிரிகிறது. இந்த இடத்தில்தான் இவன் மச்சினன் இளனி சீவி ஒரு வருடம் முன்பு விற்றுக் கொண்டிருந்தான். பனை நுங்கும் சைக்கிளில் கொண்டுவந்து நிறுத்தி விற்பான். ஆனால் கவுண்டர்கள் இளனி, நுங்கு இவனை சீவித்தரச் சொல்லி சாப்பிட்டு விட்டு காசை வீட்டில் வந்து வாங்கிக் கொள் என்றார்கள். இவன் அவர்கள் வீட்டிற்கு பிற்பாடு நடையாய் நடக்க வேண்டியதாயிற்று. கடைசியில் இந்தப் பொழப்புக்கு பிச்சை எடுக்கறது



படிப்பகம்

www.padippakam.com

வாஸ்தி என்று டவுனுக்கு கிளம்பினான். இப்டி நினைத்தபடியே இவனும் புளியமரம் வந்தபொழுது ஆணும் பெண்ணுமாக பத்துபேர் இருக்கக் கண்டான். ஆண்கள் சட்டையை கழற்றி தலைக்கு தலையணை மாதிரி கொடுத்து ஒரு கால்மேல் ஒரு கால் போட்டு படுத்தவண்ணம் இருந்தார்கள். பெண்கள் மூன்று பேர் மட்டும் தென்பட்டார்கள். அவர்கள் நிழலில் அமர்ந்தவண்ணம் பேன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். படுத்திருந்தவர்களில் ஒருவன் மட்டும் தன் நெஞ்சின்மீது வைத்திருந்த ரேடியோவை திருப்பிக் கொண்டிருந்தான். இவனுக்கு முதல் பார்வையிலேயே அவர்கள் குருவி பிடிக்க வந்தவர்களல்ல என்பது தெரிந்து போய்விட்டது. இனி பேச்சுக் கொடுத்துப் பார்க்க வேண்டும். இவன் தலை உருமாலில் வைத்திருந்த பீடிக் கட்டிலிருந்து ஒரு பீடியை எடுத்து கையில் வைத்துக் கொண்டு படுத்து ரேடியோ திருப்பிக் கொண்டிருந்தவனை அணுகினான்.

"ஏனுங்க தீப்பெட்டி இருக்குமா?" என்றான். அவன் இவனை ஒருமுறை ஏற இறங்க பார்த்துவிட்டு ஒன்றும் பேசாமல் அடிபாக்கெட்டிலிருந்து தீப்பெட்டி எடுத்துக் கொடுத்தான். இவன் வாங்கி பற்றவைத்துக் கொண்டே "வெளியூர்ங்களா?" என்றான். அவனோ எப்படி கண்டுபுடிச்சீங்க? என்பது மாதிரி இவனையே பார்த்தான். "இல்ல, இந்தப்பக்கமெல்லாம் மாட்டுத் தீப்பெட்டிதான் கெடைக்குமங்க . . . நீங்க குடுத்த தீப்பெட்டியில புலி இருக்குது, அதனால கேட்டேன்" என்றான்.

"நாங்க எல்லாருமே சேலத்துப் பக்கமிருந்து வாரோம். எல்லாருமே சொந்தக்காரங்கதான். நேத்துதான் இந்தூருல அறுப்பு முடிச்சோம். இனி மேக்கே கௌம்பணும். அதான் வெயில் சாயிறப்ப கௌம்பலாம்னு இருக்கம். உங்களுக்கு இந்தப் பக்கம் தானுங்களா. இந்தப் பக்கம் அறுப்பு பாக்கி நிக்குதுங்களா? தெரிஞ்சா சொல்லுங்க . . . பத்துப்பேரு இருக்கம் . . . இன்னிக்கு வயித்துப் பாட்டுக்கு கூட சம்பாதிக்கல" என்றான் அவன்.

"சேலத்துப் பக்கமிருந்தா, ஐயோ அவ்வளவு தூரம் இருந்து இங்க வரணுமா?"

"இதென்ன இப்படி கேட்டுப் போட்டிங்க நீங்க . . . குண்டி காஞ்சா தன்னால கொப்பத்துக்கே வேணும்னாலும் போயித்தான் ஆவணும்". இம்முறை பேனெடுத்துக் கொண்டிருந்த ஒருத்தி இவனுக்கு பதில் சொன்னாள். கூடவே "பீடி இருந்தா ஒன்னு குடு சாமி" என்றாள். இவனும் தலை சும்மாட்டுக்குள் கைவிட்டு எடுத்து அவளிடம் கொடுத்தான். அவள் அதை வாங்கிக் கொண்டு எழுந்து போய் கல் மூன்று வைத்து அடுப்புக்கூட்டி இருந்த இடத்திற்கு சென்று தீக்கங்கில் பீடி முனையை வைத்து ஊதிப் பற்றிக் கொண்டதும் புகை இழுத்தாள்.

"இதென்ன பொம்பளப்புள்ள பீடி குடிக்கறீங்க?" என்றான்.

"தே . . . நாங்க குடிச்சாக்க பொகை வராதா? இதென்ன வருதே" என்றாள். வயது முப்பது இருக்கலாம் என்று தோன்றியது இவனுக்கு.

அறுவடைக்கு ஆள் கிடைத்துவிட்ட சந்தோசத்தில் மகிழ்ச்சியாக வேறு இருந்தது இவனுக்கு. இதுவரை இவர்களை அறுப்பு விசயமாக யாரும் அணுகவில்லை என்பதும்கூட தெரிந்து போயிற்று. எப்படியும் இவர்கள் இன்று இராப்பொழுது துவங்குவதற்குள் கூட்டிப்போய் பண்ணையார் முன் நிறுத்திவிட வேண்டும் என்று வேறு மனது துடித்தது.



படிப்பகம்

www.padippakam.com

ஆயிரத்தெட்டு நொள்ளை பண்ணையார் தன் மீது பேசினாலும் எஜமான் விசுவாசமென்பது சிறுவயதிலிருந்தே அவனுக்கு பழகிப் போயிருந்தது. மல்லி ரேடியோ வைத்திருந்தவனிடம் பேச்சுக் கொடுத்தான்.

"சரி கௌம்புங்க எல்லாரும். நாளைக்கி வேலைக்கு உங்களுக்கு நானாச்சு . . . நாலஞ்சு நாளைக்கு வர்ற மாதிரி அறுப்பு நல்லாம்பட்டில இருக்குது . . போதும்ல

"நாலஞ்சு நாளைக்கா? அடேயப்பா போதும். போதும்"

"கூலி எல்லாம் எப்படி வாங்குனீங்க இந்தப்பக்கம்?"

"கூலி என்னத்த கூலி . . . தலைக்கு அஞ்சுபடி நெல் ஒரு நாள் பொழுதுக்கு"

"அதுஞ்சரிதான் . . . நீங்க சாப்புட்டீங்களா எல்லாரும்?"

"சாப்பிட்டது போக மிச்சம். ரெண்டு பேரு வயித்துக்கு ஆகும்ங்க. இனி ராத்ரிக்கிதான். அங்க வசதி இருக்குமா? அங்கயே போயி சமைச்சுக்க வேண்டியதுதான்" என்றாள் ஒருத்தி.

"ஆமா . . . பத்துப் பேருக்குமே அஞ்சாறு நாளைக்கும் வேலை இருக்குமா? இல்ல ரெண்டு நாளைக்கு பத்துப்பேரு போதும்னுட்டு மீதி நாள் மூனு நாலு பேர் போதும்னு சொல்லிருவீங்களோ என்னமோ? எதுக்கு கேக்கறன்னா காலைல அப்பிடிதா ஒருத்தர் அஞ்சுபேர் மட்டும் வந்தாப் போதும்னாரு. நாங்க முடியாதும்னு சொல்லிப் போட்டோம் வேலை செஞ்சா ஒரே இடத்துலதான் நாங்க பத்துபேரும் செய்வோம். எப்படி சவுரீங்களா?"

"இதப் போயி ஒரு பேச்சுன்னு சொல்றீங்களே . . . இன்னம் அஞ்சு பேரு வேணாலும் வாங்க".

"சரி சரி கூலி கட்டென்ரேட்டா நம்புளுக்கு வந்திரணுமுங்க நேரங்காலம் பாக்காம நாங்க வேலை செஞ்சு போடுவோம். எங்க வயித்துல அடிக்கற மாதிரி ஆளுன்னா நம்புளுக்கு ஆகாதுங்க. சரி எல்லாரும் கௌம்புங்க புறப்படுவம் . . ." என்றவன் ரேடியோவை கொண்டு போய் பெரிய துணி மூட்டையில் வைத்துக் கட்டினான். படுத்திருந்த ஆண்களும் எழுந்து அவரவர் துணி மூட்டையை கட்டித் தயாராயினர். எல்லோரும் அவரவர் மூட்டையை தலையில் வைத்துக் கொண்டு மல்லி பின்னால் நடந்தனர்.

"வருஷா வருஷம் இப்படித்தான் சேலத்துல இருந்து வர்றீங்களா?"

"இல்லீங்க . . நானும் அத செவப்பு சட்டை போட்டிருக்கானுங்கள . . . அவனும்தான். இன்னொரு கூட்டத்தோட போவமுங்க . . . அது சரிப்படல. நாங்க தனியா ஒரு கூட்டம் சேத்து இந்தப் பக்கம் மொதமொதல்ல வந்திருக்கம் . . . பொம்பளைக சேலத்துல ரெக்கார்டு டேன்ஸ் ஆடிட்டு இருந்தாங்க. ரெக்கார்டு டேன்ஸ் பொழப்புதான் இப்ப கண்காணாம போச்சுங்களே. எவம்பாக்குறான். இப்ப . . . அவங்களுக்கும் வயிறு இருக்குதல்ல . . . கூடவே வர்றேனுட்டு வந்துட்டாங்க" . . . "அப்ப அவங்க உங்க சம்சாரமில்லிங்களா?" என்று இவன். கேட்ட கேள்விக்கு அப்படி ஒன்றும். அவன் பதில் கூறவில்லை. பொழுதுவிழும். சமயமே மல்லி அவர்களை தோட்டத்திலிருக்கும் பண்ணையார் வீட்டிற்கு கூட்டி வந்துவிட்டான். பண்ணையார் வாயெல்லாம் பல்லாக இவனை வரவேற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

கூட்டத்தில் அனைவருமே வெளியூர்க்காரர்கள் என்பதில் அவருக்கு பரமதிருப்தி. கூடவே சிவந்த மேனியில் அங்கம் பூத்துக் குலுங்க நிற்கும் ஒருத்தியை வைத்த கண் வாங்காமல் பார்த்தார். "டேய் மல்லி . . இவங்கெல்லாம் ராத்திரி நம்ப மாட்டுக்கொட்டாயிலேயே படுத்துக்கட்டும். இல்ல காத்தோட்டமா தோப்புல வேணாலும் படுத்துக்கிறட்டும். சோறுக்கு ஆக்கணும்னா வேலி குச்சிய ஒடச்சிறப்போறாங்க . . கெணத்து மோட்டார்கிட்ட வேப்பமரம் ஒன்னு சாய்ஞ்சு கெடக்குதல்ல அதுல குச்சி ஒடச்சிக்கச் சொல்லிடு. தண்ணி வேணும்னா தொட்டியிலேயே இருக்கும். காலைல நேரமா ஆறுமணிக்கு மாகாளியாத்தாவக் கும்புட்டுகிட்டு அறுப்ப ஆரம்பிச்சுடுவோம். என்ன நாஞ்சொல்றது காதுல ஏறுதா?" என்றார். இவன் தலையாட்டினான்.

"ஒரு வாரம்ங்கறது ரெண்டு நாள். சேர்த்தே ஆனாலும் பரவால்ல . . வேல சுத்தமா இருக்கணும் எனக்கு . . . அப்படியே ஏன்னப்பத்தி அவங்ககிட்ட சொல்லிரு. தெனமும் கூலி கூலின்னு நச்சரிச்சுக்கிட்டே இருக்கப்படாது. வேல சுத்தமா முடிஞ்ச கையோட அவுங்களும் கூலிய கைநெறைய வாங்கிட்டு சந்தோசமா ஊருக்கு போவட்டும் என்றபடி பண்ணையார் வீட்டுக்குள் சென்று மறைந்துவிட்டார்.

"நல்லவீகளாட்டத்தான் இருக்கு" என்றாள் மல்லியிடம். முதலில் பீடி வாங்கி பற்றவைத்தவள். போகப் போகத்தான் தெரியும். பண்ணையாரு பூளவாக்கு என மனதில் நினைத்த மல்லி அதை வெளியே சொல்லவில்லை.

"ஆமாமா . . . நல்லவருதான்" என்றான்.

"சரி சரி கெணத்து மேட்டுகிட்டேயே அடுப்புக்கல்லு கூட்டிக்கலாம் வாங்க" என அவர்களை கிணற்றுப் பக்கம் கூட்டிப் போனான். கிணறு தூர்வாறிப் போடப்பட்டபோது வந்த கருங்கல்லை அவர்களுக்காக இவனே எடுத்துப் போய் அடுப்பு கட்டினான். பெண்களில் ஒருத்தி மூட்டையை பிரித்து பாத்திரம் எடுத்து தொட்டி நீரில் கழுவி உலை வைத்தாள். அவசரமாய் அரிசிக்கஞ்சி ஆள் ஆளிற்கு குடித்தார்கள்.

அவர்கள் சமையல் முடித்து சாப்பிட்டுவிட்டு மாட்டுக் கொட்டகையிலேயே படுத்துக் கொண்டார்கள். மல்லியும் அவர்களுடனே படுத்துக் கொண்டான். காலையில் கோழி கூவும் சமயமே பண்ணையார் இவர்களை எழுப்பிவிட்டார். இவர்கள் தொட்டி தண்ணீரிலே முகம் கழுவி வாய் கொப்பளித்து மீதமிருந்த சோற்றை நீர் கரைத்துக் குடித்துவிட்டு கிளம்பினார்கள். அவர்களுக்கு அந்த வாழ்க்கை பழக்கமானது மாதிரி இருந்தது. அவர்கள் தமது சாக்குப் பையிலிருந்து கருக்கருவாளை ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டு வயலுக்கு மல்லி பின்னே சென்றார்கள். வயலில் மாகாளியாத்தாவை மேற்குப்புறமாக அவர்களை கும்பிடச் செய்து முதல் அறுப்பை மல்லி ஆரம்பித்து வைத்தான். கிழக்கு வெளுக்கத் துவங்கும் நேரம் அறுப்பு ஆரம்பமாகிவிட்டது. பண்ணையார் காலையில் ஒன்பது மணிவாக்கில் தான் வந்தார். அவர் கையில் சிகரெட் புகைந்தது. சுற்றிலும் மேற்பார்வையிட்டார். மல்லிதான் நீங்க ஏனுங்சாமி வெய்யில்ல காயணும். அப்பிடி தென்னமர நிழல்ல போயி குந்துங்க என்றான். ஆனால் அவர் அதற்கு செவிமடுக்காமல் சிவப்புத் தோள்காரியையே நோட்டமிட்டார். அவளும் பண்ணையாரின் பார்வையை நேற்றே உணர்ந்திருந்தாள். அவளுக்கும் அவர்மீது கண்ணாகவே இருக்கத்தான் செய்தது! முன்பெல்லாம் ரெக்கார்டு டேன்ஸ் ஆடப்



படிப்பகம்

www.padippakam.com

போகையில் ஊர் ஊராக அலைவார்கள். அப்படி ஊர் ஊராக செல்லும்போது இவளது ஆட்டமும் கவர்ச்சிகரமாகவே இருக்கும். அப்படி ஊர் பெரிசுகள் இவள்மீது ஆசைபட்டு கேட்பதும் உண்டு. இவளும் அதற்கு மறுப்பதுமில்லை. ஆனால் இப்போதுதான் இவர்கள் டான்ஸ் குரூப்பே அண்ணன் தம்பி தகராறில் கலைந்து போனது! தம்பி ரெக்கார்டுகளையும் ரேடியோவையும் பகிர்ந்து கொண்டான். அண்ணன் எம்ஜியார், சிவாஜி உடைகளையும் கூட்டுமாட் வண்டியையும் பகிர்ந்து கொண்டான். இவளும் இவளோடு வயல் அறுப்பில் இருக்கும் சரசுவும் தனித்துப் போனார்கள். சேலத்தில் வழியின்றி பிழைப்பதற்கு இரவு நேரங்களில் மெயின் சாலையில் லாரிகளை மறிக்கத் துவங்கினார்கள். பின்தான் இவர்களோடு தொடுப்பாகி இவர்களோடே இப்படி வந்துவிட்டார்கள். பண்ணையாரை வளைத்தால் நோகாமல் காசு பார்க்கும் எண்ணம் எழுந்தது. இவளும் பண்ணையாரைப் பார்த்து உதடு கடித்தாள். பண்ணையாருக்கு இது குறியாகிப் போய்விட்டது! ஆடுற மாட்டை ஆடிக் கறக்கணும். பாடுற மாட்டை பாடிக் கறக்கனும் என்பது மாதிரி பண்ணையாரும் இவளைப் பார்த்து உதடு கடித்தார். பண்ணையாரின் பொண்ஜாதி காலையிலேயே தன் தங்கையின் குழந்தையைப் பார்த்துவரச் சென்றுவிட்டாள். பண்ணையாரின் மகளும் காலேஜ் போய்விட்டாள். வீட்டில் இவரைத் தவிர யாரும் இல்லைதான். பண்ணையார் அதைக் கணக்குப்போட்டு விட்டு இவளை அருகே வரும்படி சைகை செய்தார். அறுவடை மும்முறமாக நடந்துகொண்டு இருந்தது. இந்த செய்கைகளை எல்லாம் யாரும் கவனித்ததாக தெரியவில்லை. இவள் அருகே சென்றதும் "உம் பேரென்ன?" என்றார். இவள் "கமலா" என்றாள். "நல்ல பேரு . . என் ஊட்டுக்கு இப்பவே நீ போ நான் பின்னால வாரேன்" என்றார். அவள் கருக்கருவாளை இடுப்பில் செருவிக் கொண்டு போக இவர் மற்ற கூலியாட்களுக்கு சப்தம் போட்டார். எல்லாரும் ஒட்ட ஒட்ட அறுங்க . . கருது சிந்தாம அரி அரியா போடுங்க" என்றபடி இவரும் வீடு நோக்கி நகர சரசு மட்டும் புரிந்தது மாதிரி க்ளுக்கென சிரித்துக் கொண்டாள்.

● ●

அறுப்பு ஆரம்பித்து இரண்டு வாரமாகிவிட்டது. கதிர் அறுப்பு போரடி எல்லாமே முடிந்தும் விட்டது. வைக்கோல் போரும் இதோ இவர்களே போட ஆரம்பித்து விட்டார்கள். பண்ணையில் விளைந்த நெல்லை தூற்றி சுத்தமாக கொட்டகையில் குவித்தார்கள். சிறு குன்று மாதிரி அது குவிந்து கிடந்தது. பின் மூட்டை மூட்டையாய் சாக்கில் கொட்டி தைத்து கொட்டகையின் மூலையில் அடுக்கினார்கள். பண்ணையார் என்னமோ மாதிரி கணக்கில் குறியாய் இருந்தார். முன்பே மல்லியிடம் அவர்களெல்லாம் கூலியாக பணம் வாங்கிக் கொள்வார்களா? என கேட்டுப் பார்க்கச் சொல்லி இருந்தார். ஆனால் அவர்கள் அதற்கு ஒத்துக்கொள்வதாய் தெரியவில்லை.

வேலை இதோ இன்று முடிந்து விடும் என்பதுமாதிரி அவர்களுக்குத் தோன்றும். ஆனால் அது அடுத்த நாள் அடுத்த நாள் என்று தொடரும். ஒரு வழியாய் பதினைந்து நாள் கணக்கில் அவர்கள் வேலை முடிந்தது. மல்லிக்கும் ஓய்வு ஒழிசல் இல்லாமல் இருவாரமாய் வேலை பெண்டை நிமித்தியது. பண்ணையாரும் காலையில் நேரமே எல்லோருக்கும் அவரவர் கூலியை கொடுத்து அனுப்பிவிடுவதாக கூறிவிட்டு போய்



படிப்பகம்

www.padippakam.com

விட்டார். எல்லோருக்கும் சந்தோசம் மிகுந்திருந்தது! காலையில் ஊரைப் பார்க்க கிளம்பி விடலாம் என்ற நிம்மதியில் படுத்து உறங்கினார்கள். காலையில் அதேமாதிரி அவரவர்கள் குளித்து உடைமாற்றி புது தெம்போடு பண்ணையார் வருகைக்கு காத்து நின்றிருந்தார்கள். மல்லியும் காலையிலேயே வந்திருந்தான். பண்ணையார் வீட்டு பின்புற வாசல் கதவை திறந்து வெளிவந்தார்.

"எனக்கு ரொம்ப சந்தோசம். அப்பிடி இப்படின்னு நான் மறுபடி ஒரு வாரம். ஆயிருமோன்னு நெனச்சேன். பரவால்ல" என்றபடி அவர்களை ஒரு பார்வை பார்த்தார். மல்லிக்குந்தான் பயமாய் இருந்தது! இனித்தான் இவர் ஏதாவது பிரச்சனையை ஆரம்பிப்பாரோ என்று! அவரோ இவனே அதிசயப்படும்படியாய் போய் நெல்லு மூட்டையை ரெண்டு பேர் போய் எடுத்தாந்து இங்க போடுங்க என்றார். மல்லியும் இன்னும் இருவரும் ஓடி எடுத்து வந்து போட்டார்கள்.

"எல்லாரும் ஒன்ன நல்லாக் கேட்டுக்குங்க. அறுப்புக்கு கூலியா நாங்க நெல்லுதான் வாங்குவம்னு வீராப்பெல்லாம் பேசக்கூடாது. அத்தனையும் சேந்தா மூட்டைக் கணக்குல ஆகும். உங்களுக்கு இத்னால சிரமந்தான். நல்லா நான் சொல்றத யோசனை பண்ணிக்குங்க".

"ஐயா அறுப்புக்கூலி எல்லாப் பக்கமும் நெல்லுதானுங்களே".

"இதான் இதான் நான் சொன்னேன். அதெல்லா ரெண்டு நாள் மூணு நாள் அறுப்புக்கு அளந்து போடுறதப்பா . . இங்க அப்பிடியா செஞ்சிங்க. பதினைஞ்சு நாள் கணக்கில்ல. அதாலதான் நான் சொல்றன். நாளுக்கு மூணுபடிநெல் கணக்கு போட்டு ஒரு வாரத்துக்கு நெல் வாங்கிக்குங்க. மிச்சம் ஒரு நாள் கூலி முப்பது ரூவா போட்டு எட்டு நாளைக்கு வாங்கிக்குங்க . சரிதானா".

கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது

"என்னங்க அநியாயமாய் இருக்குது! கூலி தலைக்கு அஞ்சுபடி நெல்லுங்க. மல்லிகிட்ட சொல்லி தானுங்க வேலையை செஞ்சோம். கூலியும் ஒரு நாளைக்கு முப்பது ரூவாய்க்கறீங்க? முப்பது ரூவாய்க்கி இந்த காலத்துல எவன் வேலை செய்யறான். ஒரு நாள் கூலிக்கு எங்களுக்கு அறுபது ரூபா போட்டு குடுங்க. நீங்க சொல்ற மாதிரியே ஒரு வாரம் காசாவே வாங்கிக்கறம்".

"டே மல்லி இங்க வாடா . . . இவங்ககிட்ட நாளுக்கு மூணுபடி நெல்லுன்னு நான் சொல்லச் சொன்னத நீ சொல்லவே இல்லியா . . . ஏன் நாயே" என ஓங்கி அவன் காதில் அறைந்தார். திடுதிப்பென இப்படி சம்பந்தம் இல்லாமல் தன்னை அறைவார் என எதிர்பாராத மல்லி திருகி கீழே விழுந்தான். அப்படி சொல்லச் சொல்லி அவர் அவனிடம் சொல்லவும் இல்லை.

"கூலி முப்பது ரூபாய்னு ஆரம்பத்துலயே சொல்லச் சொன்னேன். ஏன்டா நாயே . . . இப்ப அறுபது ரூபாய்ங்றானுக . . . யாரு மொதல்றா நாசமாய் போறது . . . உங்கொப்பனூட்டுதா . . அப்பனே அடிமட்டைல தொங்கிட்டு இருக்கானாம். மகன் நெத்திக்காய் கேட்ட கதையால்ல இருக்குது" என கீழே விழுந்தவனை ஒரு மிதி வைத்து மீசையைத் தடவிக்கொண்டு அவர்களைப் பார்த்தார்.



படிப்பகம்

www.padippakam.com

"என்ன நான் குடுக்கறத வாங்கிட்டு மருவாதியா நடையக் கட்டுறீங்களா? இல்ல."

"ஐயா, மருவாதி எங்களுக்கு கெடாதுங்க . . உங்களுக்குத்தானுங்க கெட்டுப் போயிடும்" என்றான் ஒருவன். மல்லி கூட பண்ணையாரை எதிர்த்துப் பேசும் அவனை அதிசயமாய்ப் பார்த்தான். இவனுக்கு தெரிந்து பண்ணையாரிடம் யாரும் இப்படி பேசிப் பார்த்தவனில்லை. மேற்கொண்டு என்ன நடக்கப் போகிறது என்பதை காண ஆவலுற்றான்.

"சரி அப்ப உங்க இஷ்டம். பண்ணுறதப் பண்ணிக்குங்க நா சொன்னதுதான் கூலி"

"ஐயா, அறுப்புக்கு கருக்கருவாள் தானுங்க. அதே கருக்கருவாள்ல ஆளையும் அருக்கலாமுங்க."

பண்ணையாருக்கு சுங்கென்றது. தன் ஜம்பம் இவர்களிடம் செல்லாது என்பது மாதிரியும் பட்டது. இருந்தும் அவர் "என்ன மெரட்டி புடுங்கிக்கலாம்னு பாக்கறீங்களா?" என்றார்.

"மவனே இன்னைக்கு உன்ன பொலி போடாம உடமாட்டன்". என ஒருவன். தன் வயிற்றுப்புறமாய் செருகி வைத்திருந்த கருக்கருவாளை எடுத்து வேகம் காட்ட பண்ணையார் மிரண்டு பின் வாங்கினார். அருவா எடுத்தவனை இழுத்துப்பிடித்து நிறுத்த, தன் மிரட்சியை வெளிக்காட்டாமல் உறுமினார் பண்ணையார். "அவ்வளவு தூரத்துக்கு ஆயிப்போச்சா?" என்றார். "நீங்க ஏனுங்கண்ணா அவன வெட்டப் போறீங்க. நாங்க செய்யறம் அதை" என முதலில் அருவா எடுத்தவனை பின்னுக்குத்தள்ளிவிட்டு அவர்கள் இருவரும் பண்ணையாரை நோக்கி நகர்ந்தபடியே இடுப்பிலிருந்த கருக்கருவாளை எடுத்து கொண்டனர். பண்ணையார் மிரட்சியில் ஓடலாமா என நினைத்து கடைசி முயற்சியாய் எதிர்த்து நின்றார்.

"எங்க வயித்துல அடிக்கப் பாக்ற நீ சாவறதுதா்ன் சரி" என ஆளுக்கு ஒரு கையைப் பிடித்தார்கள். பண்ணையார் வெருண்டு "வெட்டிறாதீங்கப்பா . . . வெட்டிறாதீங்கப்பா. நீங்க கேட்ட கூலியவே வாங்கிக்குங்க" என்றார்.

"டே மல்லி இவன்களுக்கு அளந்து நாளைக்கு ஐஞ்சுபடி எண்ணிப் போட்டுருடா" என்றார் பயத்தினூடே. அவனும் சரியென நெல்லு மூட்டையைப் பிரித்து அளந்து கொட்டினான் அவர்கள் சாக்கிற்கு. பண்ணையார் எட்டு நாள் கூலிப் பணத்தை எண்ணி எண்ணி நாளைக்கு அறுபது அவர்கள் கேட்டபடியே கொடுத்தார். மல்லி தன் பங்கிற்கு சாக்க கொண்டுவந்து நெல்லாக இருவாரத்துக்கும் போட்டுக் கொண்டான். இதைக் கவனித்த பண்ணையார் "அது யார்க்குடா நாயே" என்றார்.

"சாமி அது எம்பட கூலிங்க. நானும் இவிகளோட சேந்து ஒழைச்சிருங்கனுங்க. அப்புறம் நானும் கௌம்பறனுங்க. நாளைல இருந்து பண்ணைக்கு வேற ஆளப் பாத்துக்கங்க. நான் வரமாட்டனுங்க. நாளைல இருந்து எம்பட மச்சனங்கூட டவுனுக்கு கார வேலைக்குப் போறனுங்க. செவுனீல அறையறீங்க . . . கீழ போட்டு மிதிக்கறீங்க . . நமக்கு அதெல்லா சரிப்படாதுங்க. நான் வாரனுங்க" என தன் பங்கு சாக்கை தோளில் போட்டுக் கொண்டு நடந்தவனை ஒன்றும் சொல்லவோ செய்யவோ முடியாமல் நின்றார் பண்ணையார். ●



படிப்பகம்

www.padippakam.com



# கதைப்பாங்கான நாட்டார் வழக்குகள்

– கழனியூரன்

பழக்க தோசம் மனித மனதை எளிதில் அடிமையாக்கிவிடும். அங்குவிலாஸ் புகையிலை போட்டுப் பழகியவர்கள் வேறு எந்தப் புகையிலையையும் அவ்வளவு லேசில் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

அங்குவிலாஸ் புகையிலையின் 'ருசி' மனதிற்கு ஆரம்பகாலத்தில் பிடித்துவிட்ட ஒருவனிடம், அதே புகையிலை தடையில் வேறு 'பிராண்ட்' புகையிலையை வைத்துக் கொடுத்தாலும் வாங்கிச் சுவைத்துவிட்டுப் பிரமாதம் என்பான்.

ஒரு சுவைக்கு பழகும் வரை தான் 'ருசி' முக்கியம். பழக்கப்பட்ட பின்பு, பிராண்ட்தான் முக்கியம். இது மனம் சார்ந்த விசயம்.

இதே கருத்தை வலியுறுத்தும் ஒரு நாட்டார் வழக்குத் தொடர்தான் "காச்சுவார் காச்சினால் கழுதை மோத்திரமும் ருசிதான்" என்பது. இனி இந்த வழக்குத் தொடருக்குப் பின்னால் உள்ள கதையைப் பார்ப்போம்.

ஒரு ஊர்ல ஒரு இளந்தாரி இருந்தான். அவனுக்கு கல்யாணமாச்சி. கல்யாணமான பின்பு புதுப்பொண்டாட்டிக்காரி, விதவிதமாக புருசக்காரனுக்கு நாக்குக்கு ருசியாகச் சமைத்துப் போட்டாள்.

புருசக்காரன், கல்யாணத்துக்கு முந்தி, அவன் மதினியாக்காரியின் கைப்பக்குவச் சமையலில் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். மதினியாக்காரியின் கைப்பக்குவம் அவனுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

கல்யாணம் ஆன பிறகு, புதுப்பொண்டாட்டி என்ன கொழம்பு வைத்தாலும், குறை சொல்லிவிட்டு, "நீ போய் என் மதினியிடம் கொஞ்சம் கொழம்பு வாங்கிக்கிட்டு வா . . ." என்று தன் பொண்டாட்டிக்காரியை அனுப்பி விடுவான்.

"தன்" சமையலை தன் கணவன் ரசித்துச் சாப்பிடவில்லையே!" என்ற மன வருத்தத்துடன் தன் மச்சான் பொண்டாட்டியின் வீட்டிற்குப் போய் கொஞ்சம் கொழம்பு வாங்கி வந்து தன் கணவனுக்குக் கொடுப்பாள் பொண்டாட்டிக்காரி.

மதினியாக்காரியின் கொழம்பை ரசித்துச் சாப்பிட்டு விட்டு, தன்



படிப்பகம்

www.padippakam.com

பொண்டாட்டிக்காரியின் முன்னிலையிலேயே அவன் மதினியாக்காரியின் கைப்பாகத்தைப் பாராட்டிப் பேசுவான்.

அடுத்த நாள், அவன் பொண்டாட்டிக்காரி, தன் மச்சான் மனைவியின் வீட்டிற்கே சென்று, அவள் எப்படி கொழம்பு வைக்கிறாள் என்று பக்கத்தில் இருந்து பார்த்துவிட்டு தன் வீட்டிற்கு வந்து அதே மாதிரி கொழம்பு வைத்தாள். அன்றும் அவள் புருசன், பொண்டாட்டிக்காரி வைத்த கொழம்பைச் சாப்பிட்டுப் பார்த்து விட்டு, "இது சரியில்லை நீ போய் என் மதினியாக்காரியிடம் நான் கேட்டேன் என்று கொஞ்சம் கொழம்பு வாங்கி வா" என்றான்.

அன்றும் விதியே என்று மச்சான் மனைவியின் வீட்டிற்குச் சென்று கொழம்பு வாங்கி வந்தாள், அவன் பொண்டாட்டிக்காரி. அவள் வாங்கி வந்த கொழம்பை ரசித்துச் சாப்பிட்டு விட்டு, அவள் புருசக்காரன் 'ஆகா பேஸ், பேஸ்' என்று மதினியாக்காரியின் கைப்பாகத்தைப் புகழ்ந்தான்.

மறுநாள் புருசக்காரன் சாப்பிட வரும் முன்னே, ஒரு பாத்திரத்தில் இருந்ததை புருசக்காரன் முன் வைத்து "இதில் உங்க மதினியாக்காரி வைத்த ரசம் இருக்கிறது; ஊற்றிக்கொண்டு சாப்பிடுங்கள்" என்றாள்.

புருசக்காரனும் பாத்திரத்தில் இருந்ததை ஊற்றிச் சாப்பிட்டுவிட்டு, "ஆகா, என் மதினியாக்காரியின் கைப்பாகமே தனிதான்!" என்றான்.

அப்போது தான் அவன் பொண்டாட்டிக்காரி சொன்னாள், "நீங்கள் சற்றுமுன் சாப்பிட்டது உங்க மதினியாக்காரி வைத்த ரசம் இல்லை, கழுதை மோத்திரம் தான் அது. உங்களுக்கு 'ருசி' நாக்கில் இல்லை; மனசில் இருக்கிறது, என்றாள்." அத்தோடு மதினியாக்காரியின் கைப்பாகத்தை மறந்தான் அந்த இளந்தாரி.

– (தொடர் தொடரும்)

## அரசு உத்தரவிட்ட அதிமுக்கிய புலனாய்வு!

அதிமுக-வில் முக்கிய தலைவர்களைக் களையெடுத்த ஜெயலலிதாவுக்கு மக்கள் மற்றும் தொண்டர்களிடம் 'இமேஜ்' கூடியுள்ளதா . . . அல்லது குறைந்துள்ளதா? குறிப்பாக, அக்கட்சித் தொண்டர்களின் 'ரியேக்ஷன்' என்ன என்பதை ஆய்ந்து அறிக்கை தருமாறு புலனாய்வுத் துறைப் போலீசாருக்கு அரசு உத்தரவிட்டது. புலனாய்வுத் துறை போலீஸாரும் புலனாய்ந்து அரசுக்கு அறிக்கை அளித்துள்ளனர்.

(தினமலர் (8.4.2000) செய்தி)



படிப்பகம்

www.padippakam.com

# சில கவிதைகள் சில பாக்கள்...

## என்னானாலும்

கோலம்
போடு பெண்ணே
விளக்கேற்று
கண்ணே
ஏழு
கோயில் போய்வா
குடிகாரன் என்றாலும்
கொண்டவன் இல்லையோ

– விக்ரமாதித்யன்

## பூமாதேவி

பூமிக்கு மேலே
பொல்லாத மனிதர்கள் நடத்தும்
போக்கிரித்தனத்தை
பொறுக்கமுடியாத
பூமாதேவி
அடிக்கடி
நடுங்குகிறாள்
பூகம்பமாக
பொங்கி எழுகிறாள்
எரிமலையாக!

– மா. செல்வராஜ், கோவை

## குமிழியிடும் நினைவுகள்

நிகழ்கால துக்கம் மறக்க
கடந்தகால அனுபவ அசைபோடலில்
தேயும் தனிமைத் தருணங்கள்;

சொந்தமாய் நேசிக்க
கொஞ்சம் புத்தகங்கள்;
உறுதுணையாய் எழுத்துக்கள்;
தொலைக்காட்சியும்
வானொலியும்
தின்ற நேரம் போக
வாசிப்பிலும்
குமிழியிடும் நினைவுகளிலும்
இறப்பு நிகழ்வு எதிர்வென்று
முக்காலத்திற்குள்ளும் இதயம்
போவதும் வருவதுமாய்
விசித்திர வாழ்க்கைப் பயணம்.

– தி. கமலி, சென்னை.



படிப்பகம்

www.padippakam.com

## ஒன்றும் இல்லை

ஒன்றும்இல் லாமையே என்றும்இல் லைஇங்கே
ஒன்றும்இல் லாததே ஒன்றுமில்லை
ஒன்றும்இல் லாமலே உண்டான தாய்க்கொல்ல
உண்மையி லேஎங்கும் ஒன்றுமில்லை
ஒன்றிலே இல்லாமல் எல்லாமு மாய்நிற்ப
தொன்றன்றி மேலான தொன்றுமில்லை
ஒன்றும்இல் லைஅடா ஒன்றும்இல் லைஇந்த
ஒண்பொருட் கொப்பான தொன்றுமில்லை

விண்என்ன மண்என்ன தீஎன்ன நீர்என்ன
வீசுபூங் காற்றென்ன விண்பரப்பில்
தண்மதி தான்என்ன தாரகை கள்என்ன
தன்னேரி லாக்கதிர் தானுமென்ன
பெண்என்ன ஆண்என்ன ஆடென்ன மாடென்ன
பேடென்ன நாடுங்கால் யாவிலுமே
திண்மையாய் நிற்பது சேர்ந்துரு வானது
ஓம்பொருள் ஒன்றன்றி ஒன்றுமில்லை.

- சீ.பெ. முத்துக்குமரன்

## கம்பம் மாயவன் கவிதைகள்

கூசாமல் பேசுகிறார்கள்.

அவரவர் ஆசையளவு பேரம்

கையில் –
முழம் பூவோடு
சகிக்கவும் பழகிக்கொண்டாள்
அந்த –
ஊமைச்சிறுமி

•

வயிறுதான் வாழ்க்கை.
பசியின்
பற்களுக்குப் பயந்து . . .

முதலாளியின்
நரிநகத்தில்
நித்நம் நித்தம்
கிழிபடும் ஏழை இதயம்.

•

அரசியல்வாதிகளைப் பார்த்து
சுட்டு விரல் நீட்டினேன்
கரும்புள்ளி வைத்து
முடித்துவிட்டார்கள்.
இந்த முறையும்

•



படிப்பகம்

www.padippakam.com

## நான் . . .

அதோ அம்மா
இதோ அப்பா
கண்ணாடி மந்திரக்கோல்
விரலாய்த் தொட்டிணைக்க
குடுவைக் கருப்பையில்
ஓரிளஞ்சூட்டின் கதகதப்பில்
வளர் உயிர்முளை
நேற்றின் வினா
இன்றின் விடை!

வர்ணங்களில்லா நிறப்பிரிகை
நிறங்களில்லா வானவில்.

வாய்க்கால் கொள்ளாமல்
வரப்புகள் தகர்த்து
வயலின்தாகம் தீர்க்கப்
பாயும் புதுவெள்ளம்.

படைப்பின் இலக்கணம் தகர்த்த
அறிவொளி சிந்திய துகள்.
நேற்றைய மேகமோதலில்
இன்று வெடித்திடும் மின்னோட்டம்
நாளைப்புதுமைகளின் முன்னோட்டம்
புதிய சூத்திரத்தின் அகரம்

- வாமனன்

சொந்தமாய் ஒரு தொழில்
துவங்கி
சொர்க்கம் படை மனிதா!

- எஸ். அறிவுமணி

## மட்பாண்ட மனிதர்கள்

- பாட்டாளி

செய்தித் தாள்களில்
தொலைக் காட்சிகளில்
இருபத்தியாறு பேர் பலி
நாற்பத்தியெட்டு பேர் பலி
என
விபத்துகளில்
வெடி குண்டுகளில்
சாதிச் சண்டைகளில்
வாழ்வைத் தொலைத்த
செய்திகளைக்
கேட்டுக் கேட்டு
மரத்துப் போய்
பாதிப்பின் தீவிரம்
உணர முடியாமல்
நீர்த்துப் போகிற போது . . .

"கடக்" கென்ற சப்தத்துடன்
கைகள் முறிய
கொப்பளித்துத் துப்பும்
ரத்தம் வழிய
தாடைகள் கிழிய
சினிமாச் சண்டைகள்
பார்த்துப் பார்த்து
சலனமின்றி ரசிக்கிற போது . . .

மெல்லப் படர்ந்து
மூளையை இறுக்கும்
வலைப் பின்னல்களினால்
வனையப் படுகிறார்கள்
மனிதர்கள்.
ஈரக் கசிவின்றி
உலர்ந்து போகும்
உணர்வின்றி.



படிப்பகம்

www.padippakam.com

# கூடாரங்கள்

சாதி சாதியாய் மக்கள்
சாதித் தொகுப்பாய்
மதம்

எல்லா மதங்களுக்குள்ளும்
இருக்கிறது சாதி

கிறிஸ்துவத்துள்ளே
ஜோசப் செட்டியார்
அற்புதம் நாடார்
மதலமுத்துக் கவுண்டர்
பறையன் ராபர்ட்
போட்டுக்க மாட்டார் சாதிப்பட்டம்

சீக்கியர்க்குள்ளும்
பர்னாலா ஒரு சாதி
பூடாசிங் மறுசாதி
முசல்மானுக்குள்ளும் உண்டு சாதி
சன்னி, ஷியா
லப்பை தொப்பை என்று

பதவி பணம் சலுகை மையம்
அரசியல் கட்சிகளின்
ஆஸ்தானமானதால்
சாதி மதங்கள் உடைந்து சிதறி
ஒதுங்குகின்றன கட்சிமையங்களில்
இதுவும் ஒரு தற்காலிகம்தான்
இந்த மையங்களின் மையத்திலும்
புதையலாக கன்னிவெடிகள்!

ஒன்று மட்டும் நிச்சயம்
சாதிப்பட்டிக்குள்ளோ
மத மண்டபத்துள்ளோ
மொழி கூடாரத்துள்ளோ
நாடு வட்டாரத்துள்ளோ
கட்சிப் பாசறைக்குள்ளே
மக்களை இனி
அடைக்கமுடியாது.
ஏன்னா . . . மக்கள்
அறிந்துகொண்டு வருகிறார்கள்
அத்தனையும் தங்களைப்
பட்டினிப் பட்டாளமாக்கும்
கொள்ளையாா கூடங்கள் என்று!

ஏர்க்கிழார்

## முங்காரி இதழ் நேரில் வாங்க

கோவையில் விஜயா பதிப்பகத்திலும், தமிழோசை பதிப்பகத்திலும் வாங்கலாம். வெளியூர் அன்பர்கள் ரூ. 5 M.O. செய்தி தபாலில் பெறலாம். இலவசமாக மாதிரி இதழ்கேட்டு எழுதாதீர்கள் – மாதிரி காட்டி வியாபாரம் செய்யும் பொருளல்ல முங்காரி.

– முங்காரி



படிப்பகம்

www.padippakam.com

# எங்க வீட்டு கவுண்டச்சி . . .

- தூக்கி செருகிய
  கொசுவச் சேலை
  பின்னிக் கட்டிய
  பெரிய கொண்டை
  பருத்து சிவந்தமேனி
  மிடுக்கு நடை
  அதிகாரக் குரல்
  அத்தனையும் ஓய்ந்துவிட்ட வரப்புகள் . . .

- தட்டிப் பார்த்து அளவு
  சொல்லும் பதம் . . .
  இறக்கி, ஏற்றும்
  அடுக்களைப் பானைகள்
  பலகார சட்டிகள்
  பதுக்கி வைக்கும் பண்டங்கள்
  கூடுகட்டும் கரையானிடம்
  கதையாய் சொல்லும் காங்குகள்

- பதறிடும் காளையும்
  பதுங்கி நிற்க
  பாளையோடு குனியும்
  பசுந் தாழையும்
  வேக வைக்கும் பார்வை.
  வயிற்றிற்காய் வாடிவரும்
  கூலிகள், போக்காய்
  விதைத்து விட்டுப்போன ஊர்கதைகள் . . .

- முக்கலும் முணங்கலுமாய்
  மூலையில் கிடக்கும்
  மெலிந்து, சிறுத்து
  நைந்த உருவம்
  நைட்டியில் சுருண்டு
  ஓரமாய் புரள,
  சொத்தோடு வைக்க மறந்த
  சொந்தங்கள் பேசிப்போகும்
  பொரணிகள் . . .

ந.ா. சுப்புலட்சுமி
திருப்பத்தூர்



படிப்பகம்

www.padippakam.com

*கவிதையில் ஒரு கதை*

# "அம்மணி"

– சிற்பி

"இப்புடிக் கூச்சத்தைப் புடிச்சே *
நிண்ணூட்டிருந்தா எப்புடி அம்மணி . ."

பெரிய பண்ணாடியின் மெல்லிய கேள்விக்கு
விசும்பினாள் அவள்

ஊரே அடங்கிப்போன
நள்ளிரவில்
கமுக்கமாய் விசாரித்துக் கொண்டிருந்தார்
பெரியவர் – செல்லப் பேத்தியை . .

விளக்கு வெளிச்சத்தில்
கன்னுக்குக் கல்நகை போட்டாற்போல்
மின்னியது கண்ணீர்

"மட்ட மத்தியானத்துலே
ஊஞ்சவேலா மரத்துடிலே
அந்தக் கண்றாவியைப் பாத்தேன்னு
பெரிய நங்கையா சொல்றா கண்ணு . ."

தாவணித் தலைப்பால்
அழுகையைப் போட்டு
அழுத்திக் கொண்டாள் அம்மணி

"கொழுரியா தனியாப் போனாலும்
கொட்டாவி தனியாப் போகாதுன்னு
சொல்லுவாங்க அய்யா . .
இப்பல்லாம் கொட்டாவி தனியாப் போனாலும்
கொழுரி தனியாப் போறதில்லீங்க . ."
ஏனுங்க நான் சொல்றது எப்புடீங்க?
இப்புடிப் பொறியறானே
உங்க சின்னண்ணன் பொஞ்சாதி"

அம்மணி கூந்தல் குலைய
முகத்தைத் தூணில் ஓங்கி ஓங்கி
முட்டிக் கொண்டாள்

"ரெண்டு மாசம்ங்கறாங்களே
நெசமா ஆத்தா"

என்று கேட்கையில்
பெட்டிப் பாம்பாய்
அடங்கிக் கிடந்தது அவர் குரல்

உடைந்து உடைந்து சிதறியது
அம்மணியின் பதில் :

"அப்புச்சி . . . எப்புடிச் சொல்றதுங்க
. . . நெசந்தானுங்க அப்புச்சி . . "

"உனக்குச் சுருக்கு வைக்கறேங்கறான்
பெரியண்ணன் . . . அவளைத்
துண்டு துண்டா வெட்டுவேங்கறான்
சின்னவன்

வேய்க்காலம் இல்லாம
பண்ணிட்டியே தாயி . . ."

"எப்புடியோ நடந்து போச்சுங்க
அப்புச்சி . . . இந்த நாயெ

என்ன வேணும்னாலும் பண்ணுங்க
அப்புச்சி .
ஆனா . . . அவரே மட்டும்
ஒண்ணும் செஞ்சுபோடாதீங்க அப்புச்சி."

★ கூச்சம் – தூண்



படிப்பகம்

www.padippakam.com

நரைபடந்த காலில்
கைகளைப் பூட்டிக் கொண்டாள் பேத்தி

★

பெரியவர் மனசில் மின்னல்கள் –
சின்ன வயதில் அவருக்குத்
தான் ஆனையாக மண்டியிட்டதும் . .

அவளைத் திருவிழா நாட்களில்
தோளில் தூக்கி அலைந்து
பம்பாய் மிட்டாயும் காற்றாடியும்
வாங்கிக் கொடுத்ததும்
அவர்கையில் ஒப்படைத்துவிட்டு
அவள் அம்மா
பிரசவத்தில் உயிரை விட்டதும்

திரட்டிச் சீர் முடிந்த பத்தாம் நாள்
அவள் அப்பன் மாடுமுட்டிச் செத்ததும்
'பண்ணாடிக வயசான காலத்திலே
ஒரு செமை வந்துது பாரு . . .'
என்று சனங்கள் அக்கியானப்பட்டதும்
மாறி . . மாறி வந்து போயின . .
எழுந்தார் பண்ணாடி
இடுப்பு வேட்டியை

இறுக்கிக் கட்டினார் . . சொன்னார்

"எந்திரி புள்ளே
வெடியுறதுக்குள்ள அவனோட
ஓடிப் போயிரு

எங்கியோ கோயில்லே போய்
தாலி கட்டிக்கோ
பத்து நாள் கழிச்சு
எஞ்சாளைக்கே வந்துரு

நான் இருக்கறண்டா
உனக்கு ஆரத்தி எடுக்க . . "

திகைத்துப் போன அவளிடம்
"இந்தா இதை வச்சுக்க
அப்புச்சி சீர்ப்பணம்"

மடியிலிருந்து
அழுக்கடைந்த ஐந்து நூறு
ரூபாய்த் தாள்களை நீட்டினார்
அப்புச்சி

சலவை நோட்டுப்போல்
அழுகை துடைத்து நிமிர்ந்தது
அம்மணியின் தலை.

## எட்டட்டும் இந்தக் கொடுமை கவிஞருக்கும் கலைஞருக்கும்

சிற்றிதழ்களை மட்டுமல்ல – படைப்பிலக்கியத் துறையின் குரல்வளையையும் நெறிக்கிறது தபால்துறை. எனது சிறுகதைத் தொகுப்பு 30 படிகள் பதிவு நூல் அஞ்சலில் 28 ரூபாயில் அனுப்பினேன். பட்ஜெட்டுக்குப் பிறகு 88 ரூபாய் கேட்கிறார்கள். பிரிண்டெட் புக்ஸ்களுக்கு ரேட் உயர்த்தவில்லை என சிற்றிதழ் செய்தியில் வந்ததை காட்டினேன். மத்ராசி படிக்கத் தெரியாது என்றார் போஸ்டுமாஸ்டர். அங்ரேஜ் பாஷையில் இருக்கிறது படியுங்கள் என்றேன். அதை அவர் ஏற்கவில்லை. விசுவாமித்ர முனிவராகிவிட்டார். இப்படி இருக்கிறது தபால்துறை! சும்மா வேண்டுகோள் வைத்தெல்லாம் ஆகாது. போராட்டம் வேண்டும். மத்தியில் பிரதமராக உள்ள கவிஞர் மாநிலத்தில் முதல்வராக உள்ள கலைஞர் கவனத்துக்கு இந்தக் கொடுமையை எட்டச் செய்ய வேண்டும் இதழ்கள்!

– சங்கொலி பாலகிருஷ்ணன், மும்பை



படிப்பகம்

www.padippakam.com



# வாசலில் யாரோ . . .

யாரோ
பார்வை வரை வந்து
பக்கம் நகர்ந்துவிட்டார்கள்
நிழல்போல் நிசப்தம்வரை
தவழ்ந்து வருகிறார்கள்
ஒரு இனியகீதம் சுமந்தபடி
நறுமணமாய்ப் பரிமளித்தபடி . . .
இருள்நிரம்ப ஸ்வரங்களை
புதைத்துச் செல்கிறார்கள்
சிறுநகைச் சிதார் நாதங்கள் துணையுடன்
ஜன்னல்மீது ஜீவிதத்தை
திரைச்சீலையாய்ப் பொருத்திச் செல்கிறார்கள்

கருப்பைக்குத் துளைகளிட்டு
முளைவிட்ட விதையை நசுக்கிச் சிதைத்தாலும்
கணத்திலும் கணப்பொழுதில் உதிர்ந்த உதிரப்பொட்டு
சபிக்கப்பட்டதானாலும்
பூமியில் விகசிக்குமுன்பே
வாழ்க்கை கூளமாய்ச் சரிந்து விழுகின்றது
பிஞ்சு அடிகள் நெஞ்சுமீது உதைத்துச் செல்கின்றன
கணகணமும் காத்திருத்தல்
தனிமைநேரங்களில் திகிலூட்டுகிறது
மாயையான ஜீவகணங்கள்
இடிகளாய் உதிர்ந்துபோகுமோ?
இதயம் ஆவியாகி பஞ்சுத்துணுக்காய்
பறந்துவிடுமோ . . .?
மனப்பாலைவனத்தில் * ஒட்டகங்கள்
அசைந்து கொண்டிருக்கின்றன
சின்னசின்ன சமாதிகளைச் சுமந்தபடி

ஆம் . . . யாரோ பார்வைவரை
வந்து செல்கிறார்கள்

என்னைப்போன்றே
அச்சாய் என்னைப்போன்றே . . .

மூலம் தெலுங்கில் : யாகூப்
ஆக்கம் தமிழில் : சாந்தாதத்

* அரபு நாடுகளில் ஒட்டகங்கள்மீது சிறுவர்களை அமர்த்தி பணம் சம்பாதிக்கும் குரூர விளையாட்டுகள் குறித்து . . .



படிப்பகம்

www.padippakam.com

# சாலமன் பாப்பையா பார்வைக்கு ஒரு வாசகர் கடிதம்

ஐயா அவர்கட்கு!

வணக்கங்கள்! குறள் மணம் மலர் 8 மணம் 4 இதழில் பட்டிமன்றப் பாப்பையாவுக்கு, அவர் குறளில் செய்துள்ள மாற்றங்கட்கு மறுப்பு வெளியிட்டுள்ளதற்கு மிக்க நன்றி!. தட்டிக் கேட்க ஆளில்லையெனில் தம்பி பெருஞ்சண்டன் என்பது அனுபவச் சொற்றொடர். அதற்கேற்ப, இத்தகைய வேலையற்ற வேலைகளை அவ்வப்போது தடுத்து நிறுத்துதல் தேவையே.

ஏனெனில், செய்தக்க, செய்யாமையானும் கெடும் அன்றோ! முன்பொருகால் பாவேந்தர் இருந்த காலத்தில் இசைவாணர் ஒருவர் திருக்குறளுக்குப் பண் அமைத்துப் பாடுகின்றேன் என்று தமக்கேற்றவாறு திருக்குறளின் சீர்களை மாற்றியும் திரித்தும் பாடி வந்தார். அவர் பாவேந்தர் தலைமையில் பாடி அவருடைய பாராட்டைப் பெற்றால் தமக்கு மேலும் பெயரும், பொருளும் கிடைக்கும் என்ற எண்ணத்தில் சிலர் வழியாகப் பாவேந்தரை அணுகி இசைவையும் பெற்று விட்டார். அதற்கென நாளும் குறித்துக் கூட்டமும் ஏற்பாடாயிற்று. பாவேந்தர் வந்து தலைவர் இருக்கையில் அமர்ந்தார். பாடகர் பாடத்தொடங்கி ஒன்றிரண்டு குறட்பாக்களைப் பாடினார். பாவேந்தர் நெற்றியில் சுருக்கங்கள் தோன்றின. அடுத்த குறளையும் அவ்வாறே திரித்துப் பாடினார். நெற்றிச் சுருக்கம் கோபமாக மாற, "டேய்! நிறுத்துடா! திருக்குறள் என்ன? உன்பாட்டன் வீட்டுச் சொத்தா? எப்படிவேண்டுமானாலும் செய்து கொள்ள? இனி இப்படிப் பாடினாய் என்றால் அறிவாய் . . .! ஓடு! ஓடுடா!!" என்று உரக்கச் சத்தமிட்டார். அவ்வளவுதான்! பாடிக் கொண்டிருந்தவர் தம் இசைக்கருவிகளைத் தூக்கிக் கொண்டு ஓடியேவிட்டார்! பட்டிமன்றப் பாப்பையாவுக்கு அறிவுறுத்த இப்போது ஒரு பாவேந்தர் வேண்டும்!.

வள்ளல் பாண்டித்துரைத் தேவர் காலத்தில் ஸ்காட் துரை என்றொரு பாதிரியார் இருந்தார். அவர் திருக்குறட்பாக்கள் சிலவற்றை எதுகை மோனையற்றவை என்று எடுத்துத் தமக்கேற்றவாறு சொற்களை மாற்றிப் பதித்தார். அதை அறிந்த வள்ளல் பாண்டித்துரை அவரிடம் சென்று அவர் பதிப்பித்த திருக்குறளை வாங்கிப் படித்தார் – ஸ்காட் துரைக்கு – பாண்டித்துரைத் தேவர் தம்மைப் பாராட்டுவார் என்ற எண்ணம். அதுவரை அப்பதிப்பின் சிலபடிகள் விற்பனையாகியிருந்தன. எஞ்சியுள்ள படிகள் அனைத்தையும் விலை கொடுத்து வாங்கினார், பாண்டித்துரைத் தேவர். ஸ்காட் துரைக்குப் பெரு வியப்பு! அத்தனைப் படிகளையும் வாங்கிக் கொண்டாரே! என்று. அத்தனையையும் எடுத்து வரச்செய்துப் பணியாளர்கட்குப் பணித்தார், ஸ்காட் துரை. அப்போது அவர் குடியிருந்த வளமனையின் முன்னாலேயே பாண்டித்துரைத் தேவர் தான் விலை கொடுத்து வாங்கிய அனைத்துப் படிகளையும் போட்டுத் தீ வைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

அவ்வாங்கிலேயருக்கு ஒன்றும் புரியவில்லை! மலைத்து நின்றார்!. வள்ளல் பாண்டித்துரை "நீர் என்ன திருவள்ளுவரைவிட அறிவாளியா? நீர் வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு போம்! திருக்குறள் என்ன? கேட்பாரற்ற சொத்தா? வந்தவனெல்லாம் - கண்டவனெல்லாம் கைவைக்க? என்று சினந்து கேட்டார்! ஸ்காட் வாயடைத்துப் போனார்! அதுபோன்ற செயல்திறம் மிக்கோர் தேவை!.

இவ்வாறே திருக்குறள் சார்பான பல பட்டங்களைத் தம் பெயருக்கு முன்னால் போட்டுக் கொண்டுள்ள "முருகு" என்பார். "குறளில் முரண்பாடுகளா?" என்றும், "குறளில் குறைபாடுகளா?" என்றும் தலைப்பிட்டு நூற்றுக்கணக்கான குறட்பாக்களைத் தம் முனைப்பின் படியெல்லாம் திரித்தும் - பொருளெழுதியும் வெளியிட்டுள்ளார். அவருடைய நூல்களுக்குப் பெரியவர் சிலரும் "பட்டும் படாமலும்" 'வழவழா - குழகுழா' - என்றும் பாராட்டுரை, அணிந்துரையெல்லாம் அளித்துள்ளார்கள்!

"அச்சேறு நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்திடலால் மேலாமோ? - முச்சில்
புடைத்துலையி லிட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ? பசிக்கு!"

என்னும் பாவலரேறு அவர்களின் நூல்நிறைப் பாடலே நினைவுக்கு வருகின்றது!.

வ.உ.சி. அவர்களின் திருக்குறள் பாயிரம் பற்றிய கருத்துக்கும் மற்றும் பல அறிஞர்களின் குறள் உரைகட்குமே அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உளவெனில் பட்டிமன்றவர் எம்மாத்திரம்? ப(ா)ப்பையா, உம் திருக்குறள் திருத்தம் தப்பையா என்று அறிவுறுத்துவது அவசியமே! இதுபோன்ற பணிகட்கேனும் குறள் மணம் வளர வேண்டும்! குறள் மணத்திற்கு மீண்டும் நன்றி!.

- ஆந்தோனிராசு

நன்றி : குறள் மணம்

## அவள் விகடன் காதுக்கு 'வள்ளுவர் வழி' கேள்வி

'திருத்துங்கள் - திருக்குறளை' என்று எழுதத் துணிந்தவர்கள், 'திருத்துங்கள் - பகவத்கீதையை', 'திருத்துங்கள் - பைபிளை', 'திருத்துங்கள் - திருக்குரானை' என்று எழுதத் துணிவார்களா?

நன்றி : வள்ளுவர் வழி



படிப்பகம்

www.padippakam.com





# THIRUVALLUVAR ON LEARNING, KNOWLEDGE AND WISDOM - X

**Ku.Ve.Ki. Aasan**

The whole universe, everything in Nature, is characterised by ceaseless motion. Movement brings about change. Out of change new things evolve.

The change brought about by natural evolution is different from the one caused by human endeavour. The former is natural (Eyarkai) while the latter is artificial (Seyarkai). Motion and the consequent change in nature are not haphazard, but take place according to certain universal laws. The universe is a cosmos, not a chaos. Nature is maked by rhythm, harmony and an organic pattern. To the extent humans understand the universal laws, they are able to control and harness effectively the forces of Nature. Gaining knowledge of the way forces of nature function helps people to speed up their work, use mechanical devices and increase production with reduced exertion. For example, when we draw a pail of water throwing the rope over a pulley and pull it downward or towards the earth, we are able to do the work with comparitive ease. On the other hand, if we lift the pail tied to the rope straight up, we have to put forth greater effort. In the latter case we go against the natural law and so find it difficult to do the same work. Thiru Valluvar says : "Even when one knows what all can be done by human beings, he has to gain the knowledge of the nature of the world and act accordingly" (couplet-637). The kural uses here the phrase "Ulakhatthu Eyarkai" - nature of the world.

It refers not only to the nature of organic and inorganic substances of the world, but also human nature as it has evolved or has been moulded in course of time. Knowledge of the physical and biological phenomena as revealed by science has increased human power. But this power should not be used in a manner as to disturb the fine balance maintained by natural laws or dislocate and destroy the intricate and intimate inter-dependence of the various forms of the natural world. Violation of this basic principle in recent times has resulted in various kinds of pollution and eological imbalance, adding to human misery.



படிப்பகம்

www.padippakam.com

Among all the beings, humans alone are capable of gaining unlimited knowledge and wisdom through experience and education using their intelligence and rational faculty. The scope of applying the immense power gained through limitless knowledge is vast. At the same time it is also conditioned by the laws that govern the existence, movement and normal functioning of everything in the world. So Thiru Valluvar advises : "Wisdom lies in knowing the way the world exists, and in living according to the nature of that existence" (couplet - 426). This and the above couplet - 637 are written in the context of public affairs. While the couplet - 426 is included in the chapter under the heading 'Wisdom' that lays down the need for an enlightened administration and citizenry to make the functioning of the state smooth and useful, the other one quoted earlier deals with the attributes of a seasoned, and responsible executive or a minister.

Of all the beings, humans alone are capable of gaining and wielding enormous power by improving their knowledge of science and technology. This power is at the command of those who lead the socio-economic and political organisations. Apart from institutional checks and balances, Valluvar wishes that the wielders of power should practise restraint knowing that material, biological and psychological forces set a limit to their activities and achievements.

We can manipulate material and biological objects and make things; but we cannot alter or violate the laws underlying their being and becoming. Among the innumerabile non-human lives, we are able to change or mould the behavious of only a few birds and animals by training and domestication and that too only to a very limited extent possible under the basic natural bio-chemical laws. The cause of humans is different. There is immense potential to change their conduct and behaviour by education. Learing new things makes our knowledge wide and deep. We come to know what is good and bad, just and unjust, possible and impossible, useful and harmful. So we acquire the ability to make intelligent choice and to improve our lives by purposeful activity. But even learning does not give humans the freedom to disobey the laws of nature : "Even though very learned, those who have not learnt to conduct themselves in harmony with (the movement and nature of) the world are really unwise." (Couplet - 140). This observation is made while Valluver deals with the behaviour of the person as an individual or a householder, under the heading "Righteous Conduct". So he implies that judgement concerning moral conduct should not ignore the nature of the functioning of the world. The author of Thiru Kural subscribes to the principle that the private behaviour as well as the public activities of people should be moderatred by consideration of conforming to the universal laws of nature.



படிப்பகம்

www.padippakam.com

# APRIL FOOL! AM I TOO?

**- Swami Sundarananda**

Every year on the first day of the month of April, several people who are deemed to be educated or who had spent more days in the classrooms of the schools or colleges enjoy the day with full freedom by befooling others who happen to come across their way. This curious custom borrowed without interest from our former rulers, who had sown in our minds the seeds of Cricketism, Neck Tie-ism and 'Helloism' is fast progressing in all the towns and cities along with the ratio of population increase, which has now crossed one hundred crores. When Bharathi wrote his golden song on his motherland he had known only thirty crores of Indians whom he declared the owners of whole country. In a very short span of time it had trebled! What greatness and nicety in increasing the number of working hands that could create wealth for the nation! When a child is born, a force of two hands emerge that will produce wealth on attaining the age of twenty.

The nation that has more hands to work must be the richest in the world, but unfortunately our country is now termed as poor country among many. In what sense our country is poor when we have 200 crores of hands ready to create wealth? Nobody is prepared to tell the truth or accept the truth which is hidden under seat of God! Is it not true that only human hands create wealth though it is told that God only created the wealth. I do not deny that the so called God had created the earth, air and water, but that itself can never be useful wealth unless the man lays upon his hands on existing nature. This is the truth that is eternal but is hidden under the dark lies. A few people emerging out from the masses as moral elites take upon their shoulders the responsibility of governing the land and guiding the people do not allow all the people to work. Selected few from the society emerge from the same society to reach the top and act as the sole representative of God and a situation was created to find out ways to control the wealth and guide the movements of the population - that is - the society. In the beginning it was almost for some centuries but slowly changed colour, where abject exploitation became the order of the day. Everything was happening behind the masses and became natural and customery that human hands willing and able to work and create wealth were morally chained to wait for the orders from the rulers of the land. Man as the product of nature or creation of God has to work and produce anything he can make with his skill to return in lieu of things he gets from others - the society. When this is the natural law on earth man has changed it aginst the will of God! Though there is only one God in the Universe some people had divided Him and glorious creations of Land and Nature into segments to own it for themselves by self appointing as natural owners of the land and faith. So we find several clonings of God.

It is said to be democracy and only the persons who are deemed to be owners of land and God should control the labour of the human beings. Unless these Toppers agree nobody can use his hands to produce anything for the benefit of the society who are free to waste their skill and energy to stay a poor - blessed by God! By this method the society is manintaining the balance between the haves and havenots keeping the God as a powerful witness!

So much go, every year on April All Fools Day is celebrated where the western lions pussed!

Sorry, friends I have taken your valuable time for goind through my scriblings. I have one request. When you go to bed to sleep dont forget to analise the day's work you have done to the society in lieu of the benefits you have enjoyed.



படிப்பகம்

www.padippakam.com

# FIE UPON THE GODDESS OF FORCE

**- Prof. K. Venkatachari**

Infants of Innocence!
Emerging from the womb
Instantly entering the tomb!
Beastly mothers!
Killing their own kids!
Preying on their own babies!

Female! The sex is the sin!
Dread of dowry devours the Divine Babe!
Pulls out the Godly Wedge of Life
Between Birth and Death!
Fie upon the Goddess of Force!
Feminine Force!
Mute witness to the strangling
of Feminine Grace!
Paradoxical people!
Deifying the feminine force!
But decimating the feminine grace!
Alas! the bud is burnt
Before it blossoms!
Spared if,
Doused to death
No sooner than wedlock!
The in-laws their own sex
Turn their own enemy!
Where is the remedy?

## சமீபத்தில் ஒரு எழுத்துத் திருட்டு

திருடப்பட்டது ஒரு சிறுகதை. திருட்டுக் கொடுத்தவர் எழுத்தாளர் – கவிஞர். கொடுமுடி க.அ. பிரகாசம். திருடியவன் கவி. பாலபரணி என்ற பெயர் மாறி. திருட்டுக் கதையை பிரசுரித்தது தினத்தந்தி. திருடப்பட்ட கதை சிவகாசியிலிருந்து வெளியாகும் வாரமுரசு 1991 தீபாவளி மலரில் 'அவளுடைய ஆத்மா' என்ற பெயரில் வெளியாகிப் பரிசும் பாராட்டும் பெற்றது. 1997–ல் வெளியான 'பூவிழி' சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்று நூலகங்களில் வாசகர்களால் படிக்கப்பட்டு வருவது. இக்கதை 'கவி. பாலபரணி' என்பவனால் திருடப்பட்டு 'உலகே மாயம்' என்ற தலைப்பில் 12.3.2000 –தேதிய தினத்தந்தி ஞாயிறு மலரில் வெளிவந்திருக்கிறது. இதில் தினத்தந்தியை குறை சொல்ல முடியாது. எத்தித் திருடும் இந்த ஈனக் காக்காய்களை கொத்த ஒரு கொடுவாள் வேண்டும். கொத்தவும் வேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# நூலரங்கம்



## பார்வைக் குறிப்புகள்

★ **என்றொரு மௌனம் - ஆசு**
தவம் வெளியீடு, கந்தப்பன் குடியிருப்பு, சூளைமேடு,
சென்னை – 600 094 விலை ரூ. 15

'ஆசு' – வின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு இது. முதல் தொகுப்பு 'ஆறாவது பூதம்' என் பார்வைக்கு வந்தபோது, தாராமதி – 150 (டிசம் '97) இதழில், "யாப்பின் கட்டையும் இறுக்கத்தையும் களைந்து எழுந்த புதுக்கவிதை இன்று பூடகத்தை ஒரு கலையம்சமாகப் போர்த்துக் கொண்டிருக்கிறது. அத்திரையை நீக்கினால் பொருள் தெளிவுறும். மக்கள் கவிதையாக மலரும். ஆசு கவிஞரும் மக்கள் கவிஞராகலாம்" என்று குறிப்பிட்டிருந்தோம். அதற்குப் பதில் போல இத்தொகுதியின் முன்னுரையில் "இக்கவிதைகளில் பூடகத் திரையை முழுமையாக அகற்றியிருக்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார். நல்லது. நன்றி. ஆனால் சில கவிதைகளில் தெரிந்தோ தெரியாமலே விழுந்துவிட்ட 'வேற்றுமை மயக்கம்' பொருட்குழப்பத்தைத் தோற்றுவித்திருக்கிறது. மற்றும் பல கவிதைகள் மடிமையை பாடுபொருளாகக் கொண்டு தன்மையில் நின்று பாடியிருப்பது, இத்தொகுப்பு கவிஞரின் 'தன்வரலாறோ' என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. அறிவுமதியின் அணிந்துரையின் சிலவரிகள் இதை ஊர்ஜிதப்படுத்துமாறும் அமைந்திருக்கிறது.

தன் கவிதைகளைப் பற்றி ஆசு இன்றைய சமூக, அரசியல், பொருளாதார அமைப்பில் ஆணவ – ஆதிக்க – அதிகார வர்க்கங்கள் ஏழை எளியோர்க்கு இழைக்கும் அநீதி, அதன் விளைவான அவலவாழ்வு தந்த அனுபவ அதிர்வுகள் என்கிறார். அறிவுமதியும் ஆசுவின் எழுத்துக்கள் போராடத் தூண்டும் என்று வாக்குமூலம் அளிக்கிறார்.

கவிஞனின் கவிதை அதிர்வும், பூகம்பத்தின் ரிக்டர் அதிர்வும் அவற்றின் வீச்சுக்கேற்ற விளைவை நிகழ்த்துபவைதான். அந்த வகையில் 'அநீதி இழைப்பில் அதிராதவன் சவம்; லேசாக அதிர்ந்து முணுமுணுப்பவன் மடி – மிடி – அடிமைபாற்பட்ட நோயாளி; வெகுண்டெழுபவன் போராளி' என்ற அளவீட்டில் ஆசு கவிதையின் அதிர்வு எந்தக் கட்டத்தில்? படித்துக் கணியுங்கள்!

★ **இயல்பு - பொன். குமார்**
15, புது திருச்சிக் கிளை வடக்குத் தெரு, லைன்மேடு, சேலம் – 636 006
விலை ரூ. 20

பொன். குமாரின் ஹைக்கூ புதிர்க் கவிதைகளைப் படித்த வாசகர்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

இத்தொகுப்பிலுள்ள அவர் புதுக்கவிதைகள் இயைபாய் – இயல்பாய் – இனிப்பாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இங்கே (பக்.16) ஒரு கவிதையில் பத்தே சொற்களைக் கொண்டு இருபத்திரண்டு வரிக் கவிதையாக வளர்த்து, சொல்ல வேண்டிய அனைத்தையும் இயல்பு (யதார்த்தம்) குன்றாமல் சொல்லிய குமாரின் மொழியாளுமை – கவிதை முடிவில் இயல்பாய் குத்தும் கருத்தூசி நறுக்கென ஏற்றினும் சுருக்கென வலிக்காத கவித்தொழில் நுட்பமும் அவரைப் பாராட்ட வைக்கிறது.

★ பாலத்தின் மீது மக்கள் – விஸ்லாவா ஸிம்போற்ஸ்கா
தமிழில் : யமுனா ராஜேந்திரன்
கனவு வெளியீடு, 8/707 C, பாண்டியன் நகர், திருப்பூர் – 641 602
விலை ரூ. 20

1996–ல் இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற போலிஷ் பெண் கவிஞர் விஸ்லாவா ஸிம்போற்ஸ்காவின் கவிதைகளில் தமிழாக்கம் செய்யப்பட்ட கவிதைகளின் தொகுப்பு நூல் இது. விஸ்லாவா ஸிம்போற்ஸ்காவின் 18 கவிதைகள் பதிப்பில் 19 ஆகியிருக்கிறது? அந்த உபரி . . .?

போலிஷ் மொழியில் எழுதப்பட்ட இந்தக் கவிதைகள் ஆங்கிலத்தில் முக்கி அன்ரை உயிரானதை மீண்டும் தமிழில் தோய்த்தெடுக்கப்பட்டபோது அதன் வண்ணம் மட்டுமல்ல – உயிரும் போய் சவமாகி இருப்பதாகவேபடுகிறது எமக்கு. அதனால்தான் ஞானிகூட அவற்றைப் பிரட்டு பிரட்டென்று பிரட்டிப் பார்த்து, கிடைத்த சுவடுகளை வைத்து பேருக்கு சிலாகித்திருக்கிறார். ஒரு நூறு தடவை புரட்டினால் இன்னும் ஏதாவது கிடைக்கும் என்று ஞானி கூறுவதும் கவிதைகள் உயிரிழந்து விட்டதை ஊர்ஜிதப்படுத்துவதாகவே கருதுகிறேன்.

நமது மரபில் சவத்திற்கும் மரியாதை உண்டே, அதிலும் பெரிய மனிதர்களின் சவத்திற்கு!

★ பூவும் புயலும் – ஆவத்தி. வெங்கடாசலம்
சிவகாமி பதிப்பகம், பூலாங் காட்டூர், பள்ளிபாளையம் அக்ரகாரம்,
ஈரோடு – 8 விலை ரூ. 30

பூவும் பாவும் ஒன்றுக்கொன்று உவமைதான். இரண்டிலும் அழகுண்டு – மணமுண்டு – தேனும் உண்டு . . . அவை முள்ளில் பூத்ததானாலும், எள்ளலில் எழுந்ததானாலும் ஓரெழுத்து ஒரு மொழி என்ற சிறப்பிலும் கூட ஒத்தவை அவை.

கவியரசு ஆவத்தியாரின் பூப்பாக்களும் சரி, புதுப்புயல் கவிதைகளும் சரி அதன்தன் இலக்கண வரம்பில் நின்று அழகைக் காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

மணமூட்டுகின்றன. தேனூட்டுகின்றன. இவைகளில் சில மக்கள் மனத்தோரணங்களுக்கும் செயல்கிறுக்குகளுக்கும் மருந்தாகவும், விழிப்புக்கும் எழுச்சிக்கும் முரசாகவும் இருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது.

★ காத்திருக்கும் மலர்கள் – சேலம் ஆறுமுகன்
பத்மினி பதிப்பகம், 45–1, நாராயணசாமி தெரு, பெரமனூர்,
சேலம் – 636 007 விலை ரூ. 25

தமிழ்ச் சமூகத்திலே மனிதத் தீண்டாமையைப் போலவே படைப்பிலக்கியவாதிகளிடையிலே இன்று இலக்கியத் தீண்டாமை நிலவுகிறது. சோகப் பின்னணியில் சங்கம் கட்டுதல், போராடுதல் ஆகிய நிகழ்வுகள் கொஞ்சமான காதல் கலவையோடு கதை நகர்ந்தால் அது முற்போக்கு படைப்பிலக்கியம். மற்றவை பிற்போக்குத் துடப்பிலக்கியம் என்பது அவர்கள் கண்ட நாவல் இலக்கணமும், இலக்கிய வகைகளும். இந்த வகைப்பிரிவில் இந்நாவல் முதல் பிரிவில் இடம் பிடித்து தீண்டத்தகும் நாவலாகி இருக்கிறது. வாசிப்பிற்கு இயைந்த சரளமான இலக்கிய நடை, உரையாடல்களில் தெரிக்கும் வாழ்வியல் அனுபவச் சுடர்ப்பொறிகள் நாவலுக்குச் சுவையும், கனமும் சேர்க்கின்றன. நாவலின் மிகை அம்சம் அதில் காணும் சினிமாத்தனம், அது ஆசிரியரின் திரையுலக வாழ்வில் ஒரு புதிய திருப்புமுனை நோக்கியதாகவும் இருக்கலாம்.

★ கரிக்கோட்டு வானவில் – நவஜீவன்
கவின் நூல்பயணம், 36, தோப்புத் தெரு, அம்மையப்பட்டு,
வந்தவாசி – 604 408 விலை ரூ. 15

"இப்ப ஏராளமான கவிதை நூல்கள் வெளியாகின்றன. அவற்றைத் திறந்து பார்த்தால்தான் தெரியும் உள்ளே இருப்பது கவிதையா . . . கழுதையா என்று" என்று நம்ம தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க் குடிமகன் சொன்னாலும் சொன்னார் நூலரங்கத்திற்கு வரும் கவிதை நூல்களைத் திறக்கவே பயமாயிருக்கிறது. இருந்தாலும் துணிந்து கரிக்கோட்டு வானவில்லை மெல்லத் திறந்து பார்த்தேன். என்ன ஆச்சரியம்! நவஜீவனின் கரிக்கோடுகள் எண்ண வண்ணமேற்ற கவிதை வளைவுகளாய் மாறி என்னை வரவேற்றன. கவிதை பாடிக் களிப்பூட்டின. ஆனாலும் அமைச்சர் சொன்னதும் பொய்யல்ல. ஆணவ ஆதிக்க அதிகாரக் கும்பலுக்கு வாலோடு புட்டம் காட்டி, எட்டி உதைக்கும் கவிதைக் கழுதைகள் சில எனக்கு முகம் காட்டின புன்முறுவலோடு. அவை அவர்கள் மீது பதித்த குளம்புத்தாரைகளில் சில :

"கரைவேட்டி முதலாக காந்திக்குள்ளாய் நபர் யாரும். உண்ணாவிரதம்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கவேண்டாம். ஒரு நாள் மட்டும் ஊரார் பணத்தை – தின்னாவிரதமிருந்தால் தேவலை."

"நூறு நிறங்களில் ஜொலித்த பூமியை இருட்டடிப்புச் செய்த இரவு – சகலத்தையும் ஒரே மூட்டையாய்க் கட்டமுயலும் சர்வாதிகார இருட்டு – நாய்களைக் கூட ரவுத்திரப்படுத்தும்."

"டன் கணக்கில் வெள்ளி – கிலோ கணக்கில் தங்கமென – கொள்ளைப் பொதி சுமக்கும் கழுதைகளை – இங்கே."

★ பொதிகை – பொதியவெற்பன் பொன்விழா மலர்
இராசாராமன் அறக்கட்டளை வெளியீடு, சிலிக்குயில் புத்தகப் பயணம்,
204, கோதண்டபாணி தெரு, கும்பகோணம். விலை ரூ. 100

சிலிக்குயில் புத்தகப் பயணி பொதிய்வெற்பன் பொன்விழாவை முன்னிட்டு கங்கை கொண்ட சோழபுரம் இரா.வீ. இராசாராமன் அறக்கட்டளை எல்லோருக்கும் அளித்த அறிவுக்கொடை இந்தப் பொதிகை எனத் தோன்றுகிறது. இன்று நாம் அறிந்திருக்க வேண்டிய – அல்லது அரைகுறையாய் அறிந்திருக்கிற – அல்லது அறிந்தே மறந்திருக்கிற பல விஷயங்களை கட்டுரை, கவிதை, சிறுகதை மூலம் நமக்கு தெளிவுபடுத்தியிருக்கிறது. இது ஒரு பயன். மற்ற பயன் நம் சமகால கவிஞர், நூலாசிரியர். பதிப்பாசிரியர் பொதிய வெற்பனை கூடுதலாக அறியக் கிடைத்தது. ஆக, இதை ஒரு வழக்கமான ஒரு விழா மலராகக் கொள்ளாது நம் விஷய ஞானத்தை மேலும் மெருகூட்டப் படிக்கத்தக்க ஒரு நூலாகக் கொள்ளலாம்.

★ டெஸ்ட் டாப் பப்ளிசிங் – டிடிபி – மா. ஆண்டோ பீட்டர்
வளர் தமிழ் பதிப்பகம், த.பெ.எண். 6224 அஜீஸ்முல்க்சந்து,
ஆயிரம் விளக்கு, அண்ணா சாலை, சென்னை – 6
விலை ரூ. 39

நகர்களில் மூலை முடுக்கெல்லாம் திறக்கப்பட்டுள்ள டெஸ்க் டாப் பப்ளிஷிங் என்கிற டிடிபி பயிலரங்கங்கள் அதற்குரிய கணிப்பொறியில் அச்சுக்கோர்ப்பு, பக்க வடிவமைப்புக்களில் நேரடி பயிற்சி மட்டுமே அளிக்கின்றன. பாடநூலில்லை. அந்தக் குறையை இந்த நூல் தீர்க்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

*நூல் விமர்சனம்*

# சாயத்திரை

– கோ. இராஜேந்திரன்

வர்ணக் கழிவுகளால் போர்த்தப்பட்ட நதி வர்ணங்களை உள்ளுக்குள் உறிஞ்சிக் கொண்ட நிலம், மனிதர்களின் மன வர்ணங்களைப் போல தனக்குள்ளும் இளநீரை வர்ணமாக்கிக் கொண்ட தென்னை, இந்த வர்ணக் கழிவுகளைத் தாண்டி நடுத்தரத்தின் வாழ்க்கை நகர இயலாதவொன்றாய் இருக்கிறது. நதி, நிலம், மனிதர்கள் என்று சாயம் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டிருந்தது தாயின் கருப்பைத் தவிர. கதையில் இருக்கிற இந்த அடர்த்தியான செய்தி படிக்கிற யாரையும் பதைபதைக்கச் செய்யாமல் விடாது.

சாயத்திரைக்குள்ளிருந்தாலும் வேஷமிடாத இயல்பான மனிதர்கள் வந்து போகிறார்கள் கதை நெடுகிலும். வெகு இயல்பாய் வாழ்ந்துக் கொண்டிருக்கிற பக்தவத்சலம். பெரிய கனவுகளின்றி சின்ன சின்ன ஆசைகளோடு வாழ்ந்துக் கொண்டிருக்கிற ஜோதிமணி, பிரித்தெடுக்கப்பட்ட பனியன் கழிவுகளைப் போல வாழ்க்கை நடத்தும் நாகன், வியாபாரம் நொடித்து வெறுமையாகிவிட்ட வாழ்க்கையிலும் ஏதோவொரு சுகம் தேடிக் கொண்டிருக்கும் சாமியப்பன், தொங்கிக் கொண்டிருக்கும் கயிற்றைப் போல ஊசலாடும் வாழ்க்கையை வாழ்ந்து இறுதியை தொட்டுவிட்ட செட்டியார், படிக்க ஆசைகளிலிருந்தும் அவலம் காரணமாய் பனியன் கம்பெனிகளுக்குள் முடங்கிப் போகும் குமார், இன்னும் சாயம் தின்று மீதியான விரல்களோடு திரியும் வேலுச்சாமி. எல்லோரும் இருக்கிறார்கள். யாரும் குபேர வாழ்க்கையை வாழ்ந்து பார்த்ததாய் நினைவில்லை. அவர்களது வாழ்க்கையின் நிலையும் நொய்யல் நதியைப் போல நிறம் மாறியிருந்தது.

சாயமே வெளியாய், சாயமே துகள்களாய் சாயமே காற்றாய் சாயத்தையே சுவாசித்து சாயத்திலே குளித்து, சாயத்துக்குள்ளே புதைந்து போன வாழ்க்கையாய் விரிகிறது கதை. படிக்கிறபோது வானம்கூட விரித்து வைத்த சாயத்திரையாய் மாறுகிறது.

இயற்கையின் அழிவுகள் மனித சமூகத்தின் வீழ்ச்சி என்பதை சுப்ரபாரதி மணியன் அழகாக பதிவு செய்திருக்கிறார். அருகில் ஓடிக் கொண்டிருந்த நதியை சாகடித்துவிட்டு குடம் நீருக்காக லாரிகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பது எத்தனை துயரகரமான சம்பவம்.

பணம் மக்களுக்கு தேவைதான். ஆனால் பணம் மட்டுமே வாழ்வின் தேவையாகிவிடாது. ஜப்பானில் மக்கள் வீடு கட்ட மரங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள். அவர்களுக்கு இரைப்பையைவிட இயற்கை முக்கியம். அதனால் மரங்களை வெட்ட அமைதியில்லை. ஆனால் இங்கே சாயப்பட்டரைகளை அனுமதித்து நிலத்தடி நீரை விஷமாக்கிய இரைப்பையும் பணமும் வாழ்வின் முக்கியமான தேவைகளாய் போய்விட்டது.

சுப்ரபாரதி மணியன் இக்கதை மூலமாக தருகிற எச்சரிக்கை உணர்வை நாம்



படிப்பகம்

www.padippakam.com

சரியாக உள்வாங்கி கொள்ளாவிட்டால், சுற்றுப்புறச் சூழல்கெட்டு, காற்றைகூட நாம் காசு கொடுத்து வாங்க வேண்டிய அவலநிலை உருவாகிவிடும்.

வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிய அந்த நொய்யல் நதியை சாடித்த மனிதர்கள் அதைவிடப் பெரிதாய் என்ன வாங்கிவிட்டார்கள்.

மேலைநாட்டு கவிஞன் ஒருவன் "ரோஜாக்களை விற்று அதைவிட உயர்ந்ததாய் என்ன வாங்கிவிடப் போகிறீர்கள்" என்று கேட்டதைபோல, சாயக் கழிவுகளுக்கு நதியையும், நிலத்தையும் தின்னக்கொடுத்து விட்டு அதைவிட என்ன உயர்ந்ததாய் வாங்கி வைத்திருக்கிறோம். சிந்திக்க வேண்டிய கேள்வி. இந்த செய்தி யாரிடம் சென்று சேர வேண்டுமோ அவர்களுக்கு சென்று சேர்ந்தால், இந்த சாயப்பட்டறைகளிடமிருந்து ஒரு விடிவுகாலம் வந்தால், அது சுப்ரபாரதி மணியனுக்கு கிடைத்த வெற்றி எனக் கொள்ளலாம்.

எந்த கலை ஜீவனுள்ளதாக இருக்கிறதோ அது வாழ்க்கையிலிருந்து வடிக்கப்பட்டிருக்கும். எந்த கலை வாழ்க்கையிலிருந்து வடிக்கப்பட்டிருக்கிறதோ அது ஜீவனுள்ளதாக இருக்கும். இது கவிஞர் வைரமுத்து சொன்னது.

"சாயத்திரை" வாழ்க்கையிலிருந்து வடிக்கப்பட்டிருப்பதால் அது ஜீவனுள்ளதாக இருக்கிறது. இது சுப்ரபாரதிமணியத்தின் சமூகம் சார்ந்த பார்வையின் பதிவு என்றே சொல்லலாம்.

## "உயிரும் விளக்கும் . . ."

ஒவ்வொரு விளக்கும் தனித்தனியே எரிய எண்ணெயும் காற்றும் வேண்டும். அதுபோல் ஒவ்வொரு உடலிலும் தனித்தனியே உயிர் நிலைத்திருக்க ஒவ்வொரு உடலுக்கும் தனித்தனியே உணவும் காற்றும் வேண்டும்.

முதல் விளக்கை அணைத்தாலும் அதிலிருந்து ஏற்றப்பட்ட விளக்குகள் எரியும். அதேபோல் நம்மைப்பெற்றவர்கள் இறந்தாலும் நாம் உயிர் வாழ்கின்றோம்.

விளக்கை அணைத்தால் அதில்எரிந்த நெருப்பு என்ன ஆனது? எங்குச் சென்றது என்றும் யாரும் விளக்கம் சொல்ல முடியாது. அதேபோல்தான் உயிரும் உடலைவிட்டு அகல்கிறதே அன்றி (உயிர்த்தன்மையை உடல் இழக்கிறதே அன்றி) நீங்கிய உயிர் பேயாகவோ, ஆவியாகவோ அலைவதும் இல்லை; வேறு உடலில் சென்று புகுவதும் இல்லை. எரிகின்ற விளக்கிலிருந்துதான் நெருப்பு இன்னொரு விளக்கிற்குப் பிரிகிறதே தவிர, எரிகிற விளக்கை அணைத்ததும் தானே வேறொரு விளக்கைச் சென்றடைந்து எரிவதில்லை. அதேபோல் இறந்த உடலில் இருந்து விலகும் உயிர் தாயின் வயிற்றில் வளரும் குழந்தையின் உடலில் புகுந்து கொள்வதில்லை.

மஞ்சை - வசந்தன், எம்.ஏ.எம்.எட்
எழுதிய - 'அர்த்தமற்ற இந்துமதம்'
பக்கம் - 6



படிப்பகம்

www.padippakam.com

# அனிச்சமலர் வாசகர் திரு.வி.கே. துரையன்



நான் அறிந்தவரை மிக நல்ல – நேர்மை மிகுந்த – தீவிரவாசகர் கோவையில் வாழ்கின்ற வி.கே. துரையன் அவர்கள். அவர் வாசிப்புக்கு ஓசி தேடுபவர் அல்ல. காசு கொடுத்து நூல்கள் வாங்கி வாசிப்பவர். இதழ்களில் நூலாய்வுப் பகுதிகளில் அறிமுகப்படுத்தும் நூல்களில் பிடித்தமானதை என்ன விலையானாலும் வாங்கிப் படிப்பவர். அப்படி படிக்கும் நூல்களை வீட்டில் பீரோக்களில் வைத்து அழகு பார்ப்பவரோ பெருமைப்படுபவரோ அல்ல. படித்து முடித்ததும் படிக்கும் ஆர்வமுடைய எவருக்காவது வழங்கி விடுவது அவர் வழக்கம். இப்படி, தான் படிப்பதோடு படிக்கின்றவர்களுக்கு படிக்க உதவும் பண்புள்ளவர் இவர்.

இவர் நூல்களை மட்டும் படிப்பவரல்ல. பத்திரிகைகளை – அதிலும் சிறுபத்திரிகைகளை விரும்பி, வாங்கிப் படிப்பவர். சிறந்த சிற்றிதழ் ஆர்வலர் – ஆதரவாளர் என்று கூடச் சொல்லலாம். ஒருசமயம் "தபால்துறையும் அரசும் தரும் தொல்லை, பேப்பர்விலை அச்சுக்கூலி உயர்வு ஆகியவற்றால் சிற்றிதழ்கள் வளரும் வாய்ப்பின்றி வாடுகின்றன" என்று வருத்தப்பட்டு எனக்கு எழுதியிருக்கிறார். அப்படி எழுதியவர் தற்போது ஒரு இதழின் போக்கைக் குறித்து இப்படி எழுதுகிறார்.

"'சொல்' என்ற பத்திரிகை ஒன்று. அதில் முதல் கதை மொழியாக்கம். தயவு செய்து அதைப் படித்துப் பாருங்கள். காறித் துப்பத்தோன்றும். ரூ. 30 கொடுத்து வாங்கி, பாதிக்கதை படித்தவுடன் புத்தகத்தைக் கிழித்து ரோட்டுக் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு வந்தேன்" என்று எழுதி வருந்துகிறார். இப்படி சில பத்திரிகைகள் வாசிக்கும் மக்கள் மனங்களில் கழிவுகளைக் கொட்டி மாசுபடுத்துவது ஒருபுறமிருக்க, பத்திரிகைகளுக்கு ஆதார – அடிப்படையாக இருக்கும் வாசகர்களை எள்ளி நகையாடிக் கேவலப்படுத்தும் போக்கும் இருக்கிறது. கோவை தரு பதிப்பக வெளியீடான 'ஆரண்யம்' இதழிலிருந்து இதயம் பேசுகிறது பத்திரிகை எடுத்துப் போட்ட ஒரு பகுதியைக் கத்தரித்து எனக்கு அனுப்பியிருந்தார் துரையன் அவர்கள்.

அதில் வாசகர்களை நோக்கி எழுதப்பட்ட கேள்விக் கணைகள் : "எத்தனை பேர் (வாசகர்கள்) பழைய சிறுபத்திரிகைகளைச் சேகரித்து வைத்திருக்கிறீர்கள்? அல்லது எடைக்குப் போட்டு விட்டீர்களா? அவ்வளவு எடை இருந்தனவா அவை? எந்தப் பெரும்பத்திரிகையின் விலைக்குப் பழைய காகிதக்காரன் அவற்றை வாங்கிக் கொண்டான்? அதுசரி, அவற்றை ஏன்



படிப்பகம்

www.padippakam.com

எடைக்குப் போட்டீர்கள்? உங்கள் எதிர்பார்ப்பை அவை எதிர்கொள்ள வில்லையா? அறையில் இடமில்லையா? நீங்கள் இல்லாதபோது உங்கள் மனைவி தூக்கிப் போட்டாளா? அவற்றிலிருந்து உற்பத்தியான பூச்சிகள் உங்கள் குழந்தையின் காதுக்குள் நுழைந்து விட்டனவா? இல்லை, அவ்வளவு வறுமையா?"

"இது அவரை பெரிதும் பாதித்திருக்கிறது. இதுபற்றி அவர், "வாசகர்களை இவர்கள் மிக மிகத் தாழ்வாக மதித்துக் கேள்விகளைக் கிண்டலாகக் கேட்டிருக்கிறார்களே. இவர்கள் இதழ்களைப் படிப்பவர்கள் யார்? கொஞ்சம்கூட அறிவில்லாமல் இப்படி எழுதியதை – கேள்வி கேட்டதை சிற்றிதழ்கள் சங்கத் தலைவர் என்ற முறையில் நீங்கள் அவர்களைக் கண்டிக்க வேண்டும் என்பது என் எண்ணம். வாசகர்கள் மனைவிகளைக் கூட இவர்கள் விட்டு வைக்கவில்லையே! கடைசியாக, கடவுளே! இந்தச் சிற்றிதழ்கள் அசிங்கத்திலிருந்து வாசகர்களைக் காப்பாற்றுங்கள் எனச் சொல்வதைத் தவிர வேறு சிந்தனை இல்லை" என்று மனம் நொந்து எழுதுகிறார்.

சமீபத்தில் 9.3.98–ல் எனக்கு ஒரு கார்டு எழுதினார். "சிறு பத்திரிகைகள் எதையும் நான் படிக்கும் மனநிலையில் இல்லை. யாராவது பிரியப்பட்டு படிப்பவர்களுக்கு அனுப்பினால் உபயோகமாக இருக்கும். பத்திரிகை + தபால் செலவு வீணாக வேண்டாம். இனி முங்காரியை எனக்கு அனுப்ப வேண்டும்" என்று எழுதினார். இங்கு ஒன்று குறிப்பிட்டாக வேண்டும். இந்த வாசகரை என்று சந்தித்தேனோ அன்றிலிருந்து அவருக்கு என் இதழ்களை அனுப்பி வருகிறேன். சந்தா என்று நான் இதுவரை அவரிடம் வாங்கியதில்லை. இவர் இதழ் அனுப்ப வேண்டாம் என்பதால் எனக்கேதும் நஷ்டமில்லை. இதழ்களின் போக்கு இப்படி இருந்தால் சிற்றிதழ்களுக்கு வாசகர்கள் என்று எவரும் இருக்கமாட்டார்கள். இதழாளர்கள் இதழ்களை வெளியிட்டு தங்களுக்குள்ளாகவே 'எக்ஜேன்சு' முறையில் விநியோகித்து படித்துக் கொண்டு போக வேண்டும் அல்லது கசுமாலங்களை நாடி ஓடும் வாசகர்களை மீட்டெடுத்து மாசகற்றித் தூய மனிதனாக்கும் நம் பெரு நோக்கைக் கைவிட்டு, கஞ்சா – அபினி – ஈரோயின் கதை சதை வியாபாரத்தில் பேரிதழ்களோடு போட்டியிட்டு, கசுமால விரும்பி வாசகர்களைக் கவர்ந்திழுக்க வேண்டும். அதற்காக சிற்றிதழ்களில் அவற்றை விட கூடுதலாகக் கவிச்சியைக் கூட்ட வேண்டும். எதைச் செய்யலாம்? பசுவாக இருந்து மக்களுக்குப் பால் வார்க்கலாமா? இல்லை பன்றிகளோடு பன்றியாக இணைந்து மலந்தின்று, சாக்கடையில் புரண்டு மக்களுக்கு மண்டை (மூளைக்) காய்ச்சல் வழங்கலாமா? சிந்திக்கும் நேரம் இது. இச்சிந்தனைக்கு வழிவகுத்த வாசகர் திரு. V.K. துரையன் அவர்களுக்கு நான் மட்டுமல்ல – நம் சிற்றிதழ்கள் சகாக்கள் அனைவருமே நன்றிக்கடன் பட்டவர்களே.

நன்றி திரு. துரையன் அவர்களே!



படிப்பகம்

www.padippakam.com

# சிற்றிதழ் வளாகம்

## புதிதாக பார்வைக்கு வந்த இதழ்கள்

★ ஆசை - சிவ. ஸ்ரீ. ரமேஷ்
சம்ஸ்பார்க் டைலர்ஸ், பங்காரு மாண்ஷன்,
22, திருவள்ளுவர் சாலை, திண்டுக்கல் – 3, ஆ.ச. ரூ. 50

விழா மலரைப்போல அழகாக இருக்கிறது ஆசை இதழ். விதவிதமான வண்ண விளம்பரங்களுக்கிடையே கவிதை மணி, கதைச் சலங்கை, கட்டுரைக் கொலுசு கலகலக்கின்றன.

★ புது எழுத்து - கே.எம். தட்சிணா மூர்த்தி
பன்னீர் செல்வம் தெரு, காவேரிப்பட்டணம். தனி இதழ் ரூ. 25

காலாண்டிதழ்கள் எப்பொழுதுமே கொஞ்சம் கனமாகத்தான் இருக்கும். இதுவும் அப்படித்தான் சாங்சி, மூசோ சொஸ்கி, ராபர்ட் க்ர்வி, டேனிஸி லெவர்டோவ், ஜார்ஜ் லூயி போர்ஹே, 1999 நோபல் பரிசாளர் குந்தர் க்ராஸ் ஆகிய பன்னாட்டுக் கவிஞர்களின் ஏகப்பட்ட மொழிபெயர்ப்புக் கவிதைகள் புதுக்கவிதை வடிவில்! சிறு கதைகளில் கூட இதிலொன்று அதில் ஒன்று. கட்டுரைகளிலும் ஒன்று பிறமொழி க்விஞர் கவிதை உலகம் குறித்து. இத்தனையும் பசுவய்யா, பாவண்ணன், பார்த்திபன், பிரம்மராஜன், பெருமாள் முருகன், தமிழவன், சுகுமாரன் ஆகிய நட்சத்திரப் படைப்பாளிகளின் கைவண்ணத்தில் மினுமினுக்கிறது.

★ சாந்தி வளாகம் - கி.மு. அப்துல் வஹாப்
10, முனவர் ஆவன்யூ, 4-வது தெரு, பல்லாவரம், சென்னை – 600 043.
ஆண்டு சந்தா ரூ. 45.

சமயப் பொறையும், சாத்வீக உணர்வும் கொண்ட இஸ்லாமிய அன்பர்கள் நடத்தும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு இலக்கிய மஞ்சரி.

★ கல் ஓசை - எஸ்.பி. ஞானமணி
472-F1, மாசிலாமணிபுரம், திண்டுக்கல் – 5

தமிழ்நாடு கல்லுடைக்கும் தொழிலாளர் சங்கத்தின் வெளியீடு. கல்லுடைக்கும் தொழிலாளர்களின் விழிப்புணர்வு, மேம்பாடு குறித்த செய்தி, தகவல்களும், சங்கச் செயல்பாடுகள், அறிக்கை, அறிவிப்புகள் தாங்கி வரும் மாத இதழ்.

### புதிதாக தாஸ்னாவில் இணைந்த இதழ்கள்.

238. ஆசை, சிவ.ஸ்ரீ. ரமேஷ், திண்டுக்கல் – 3
239. இனமுரசு, தெ. ஞானபிரகாசம், வத்தலக்குண்டு.



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் மேடை

B. சாந்தாதத், ஹைதராபாத்

இதழ் சமர்ப்பணம் வித்தியாசமாய் அமைந்திருக்கிறது. சிற்றிதழ்களின் நீண்ட ஆயுளுக்கு தபால்துறையின் சேவையும் ஒரு முக்கிய தேவையாகிறது என்பதால் இந்த சமர்ப்பணம் இக்கடுங்கோடைக்கு இதமான ஐஸ்கிரீம்! இதழ் தாமதமாக வெளியானாலும் வரவேற்கத்தக்க மாற்றங்களுடன் கூடிய இதழாக அமைந்திருப்பது தாமதத்தைச் சமன் செய்திருக்கிறது. பாராட்டுக்கள்!

பொன்னீலன், மணிக்கட்டிப் பொட்டல் (குமரி)

தபால்துறைக்கு வைத்திருக்கும் விண்ணப்பம் முக்கியமானது. மக்களுக்குத் தெரியும்படியாக ஏதாவது செய்யவேண்டும்.

கழனியூரன் நிறைவான கட்டுரை தந்திருக்கிறார். வாமனன் சிறுகதை 'தடை' சிறப்பாயிருக்கிறது. 'Pretty Fool I am' சுவாமி சுந்தரானந்தாவின் ஆங்கில நடைச் சித்திரம் சுவையாக இருக்கிறது. 'சாகலாமா இவர்கள்' என்று வெளியிட்டிருக்கும் செய்திகள் அதிர்ச்சிதருவன. சுந்தரராசனார் எப்பேர்பட்ட தமிழறிஞர்! பாவேந்தர் பாடல்களை அவர் பாடக்கேட்டு மயங்கியிருக்கிறேன். போய்விட்டாரா? அதேபோல கு.ச. ஆனந்தன் . . .

எழுஞாயிறு, சேலம்

தமிழ் நெஞ்சனின் 'தள்ளி நில்லுங்கள்.' விக்ரமாதித்யன் கவிதை, ஏர்க்கிழாரின் "நினைவு கூறுங்கள் ஆள்வோரே!" பாக்கள் எளிமையாகவும் இந்த எளியவன் போன்றோரும் புரிந்து கொள்ளுமளவிலும் சிறப்பாக உள்ளன. 'நூலரங்கம்' சிற்றிதழ் வளாகம் நல்ல பகுதிகள்; பல்வேறு செய்திகள்; அருமை!

"சாகலாமா இவர்கள்?" – பெருமக்கள் மூவரை நினைவுப்படுத்தி அவர்களின் சாதனைகளை அடுக்கிக் காட்டி, இறுதியில் "செத்துத்தான் போய்விட்டார்கள். அங்கலாய்பதன்றி என்ன செய்ய?" என்ற குன்றத்தின் சொற்கள் நெகிழ வைக்கின்றன!

மேலுறையில் "நாளைய வரலாறு நல்லதாய் அமைய ஏற்றவை செய்தலே என் தலைக் கடனே!" அருமை!

குமரி மைந்தன், பாளையங்கோட்டை

'தடை', சிறுகதையும், உழவர் சந்தை, பற்றிய குறிப்பும் இன்றைய உண்மையான முரண்பாடாகிய அரசுக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாட்டைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளன. எதிர்கால இலக்கியம்



படிப்பகம்

www.padippakam.com

எத்திசையில் நடைபயில வேண்டுமென்ற தடத்தையும் சுட்டிக் காட்டியுள்ளன. பாராட்டுக்கள்.

சரோஜினி பாக்கியமுத்து, நெல்லை

தாராமதியும், முங்காரியும் சிறப்பாகச் செயல்படுகிற சிறுபத்திரிகைகள். பணநோக்கமின்றி, இலக்கியம், மனிதநேயம் ஆகியவற்றை முன்னிறுத்தி உழைக்கும் உண்மையான எழுத்து முயற்சி, அண்மையில் வெளியான கூட்டப்பனை சாவக்கட்டு, தடை முதலியன அருமையான கதைகள். பத்திரிகையில் வெளியாகும் கவிதைகளிலும் சோடையில்லை. தங்கள் பத்திரிகையுடன் சம்பந்தப்படுவது எனக்குப் பெருமை தரும் விஷயம். ஆசிரியக் குழுவில் பங்கேற்கிறேன்.

ஆதங்கோடு அனிஷ்குமார், திருச்சி

தபால்துறைக்கு தங்கள் தலையங்கத்தில் விடுத்த வேண்டுகோள் நிறைவேற வேண்டும். சந்தாத் தொகையில் பாதிக்கு மேல் தபால்துறைக்கு சென்று சேர்ந்துவிடுகிறது. வெளிவந்திருக்கும் கவிதைகளில் கவித்வம் குறைவாய் விஷயம் தெளிவாய் தமிழ்நெஞ்சன் கவிதையும், வா.மு. கோமு கவிதையும் இனிமையாயிருக்கின்றன. ஏர்க்கிழார் கவிதை சமுதாயச் சிக்கலை தீர்க்க முனையும் விழிப்புணர்வு நோக்கி நகர்வதோடு, நம்மையும் நகர்த்துகிறது. இதழ் கனமான உள்ளடக்கத்தோடு இருமொழிப் படைப்புக்களை ஊக்குவிப்பதாக வந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.

கவியோவியத்தமிழன், அய்யலூர்

முங்காரி காணாது தவித்த நான் முங்காரி கண்டு மகிழ்ந்ததோடு வாழ்த்துக்களோடு சில வார்த்தைகள் . . . மூலம் இதழின் தடங்கலினால் ஏற்பட்டிருந்த மனச் சிக்கலிற்கு தீர்வு கண்டு தெளிவு பெற்றேன். முகப்பின் சமர்ப்பண வரிகளே தபால் துறைக்கு நெத்தியடியாய் இருந்தாலும் தலையங்கம் வீரியமாய் சிற்றிதழ்களுக்காய் குரல் கொடுத்தது நெஞ்சில் ஒட்டிக் கொண்டது.

ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம் செத்தோம் என்றில்லாமல் செத்தாலும் வாழும் வழி காணும் விதத்தில் முங்காரி முழக்கமிடுவது குன்றம் அய்யாவின் இலக்கியத்திற்கான உழைப்பைச் சொல்லும் ஓங்கார குரலாகவே படுகிறது.

வழக்கம்போலவே கழனியூரானின் நாட்டுப்புற வழக்குகள் நயமாய் இருந்தது. வாமனனின் தடை சிறுகதை லகுவாய் இதயம் திருடி மனக்கிடங்கில் குடி புகுந்தது. கவிதைகளிடம் காந்தத்தின் ஈர்ப்பு சக்தி அதிகமாகவே தென்பட்டது.

மொத்தத்தில் நெடுநாளைக்குப் பிறகு இதழ் கரம் கிட்டினாலும் உள்ளத்தை உருக்குவதாய் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

பாட்டாளி, திருச்சி.

கழனியூரானின் தத்துவார்த்த ஏற்றம் நன்றாக இருந்தது. அதேபோல வாமனனின் தடையும் கவிதைகளில் பழமலய்யும், பட்டி சுவும், வா.மு.கோமுவும் நல்ல கவிதை தந்திருக்கிறார்கள். மாநாட்டுச் செய்திகள் வராக்குறையை நிவர்த்தி செய்யும் விதமாய். இவர்களைப் பற்றி இவர்களில் அய்யா ஆணைமுத்து பக்கமே உண்மைகள். நூலரங்கம் – சிற்றிதழ் வளாகம் – சின்னச் சின்ன விமர்சனச் செய்திகள் என இதழ் பூரண நிறைவளித்தது.

தசிச தலைவருக்கு ஒரு கேள்வி : தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தில் சாதி இதழ்கள் இடம் பெறலாமா? இடம்பெறுவது சரிதானா?

பூமேடை இராமையா, நாகர்கோயில்

முங்காரியில் எழுத்து பிழைகளா! களையவேண்டும் கவனமாய்

## சிற்றிதழாளர் கவனத்திற்கு

தபால்துறை சிற்றிதழ்கள் (Small Newspapers) எல்லாவற்றிற்குமே தான் கொடுத்திருந்த சலுகையைப் பறிக்கவில்லை. பறித்தவற்றிற்குக் கூட மீண்டும் கொடுத்திருக்கிறது. இன்னும் சில இதழ்களுக்கு மட்டுமே கொடுக்காமலுள்ளது. அப்படி சலுகை இழந்து சிற்றிதழ்கள். சலுகை இழப்புக்கு தபால்துறை தந்த காரணம், அது குறித்து இதழாளர் எழுதிய கடிதம் ஆகிய விபரங்களோடு, இதழின் ஒரு பிரதியும் வைத்து தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்திற்கு அனுப்புங்கள்.

முகவரி : தாஸ்னா, புலமைப் பண்ணை, கோவை – 641 007.


## FORM A, Rule - 8

Statement of ownership and other particulars about MUNGARY monthly, Coimbatore - 641 007.

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication | : 33, Ajai Mukerji Road, K.C.Palayam, CBE - 7. |
| 2. | Periodicity of Publication | : Monthly |
| 3. | Printer's Name | : K.M. Ramaratnam |
| | Nationality | : Indian |
| | Address | : 33, Ajai Mukerji Road, K.C. Palayam, CBE - 7. |
| 4& 5. | Name of Publisher and Editor | : K.M. Ramaratnam |
| | Nationality | : Indian |
| | Address | : 33, Ajai Mukerji Road, K.C. Palayam, CBE - 7. |
| 6. | Name and Address of Owner | : K.M. Ramaratnam<br>33, Ajai Mukerji Road, K.C. Palayam, CBE - 7. |

I, RAMARATNAM K.M. hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

28.2.2000

(Sd) **K.M. Ramaratnam**
Publisher




படிப்பகம்

www.padippakam.com

Mungary
a bilingual monthly

தாஸ்ஸ்ளா உறுப்பிதழ்

RNI Regd. No. 71272□98
Postal Regd. No. ......................

# மணவிழா மற்றும் நூல் வெளியீட்டு விழா

கவிஞர் பா.சு. மணி அவர்களின் மகள் செல்வி. பாண்டிச்செல்வி மணவிழாவை ஒட்டி பா.சு. மணி அவர்களின் 'இதயவிழிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. அமைச்சர் இ. பெரியசாமி, திண்டுக்கல் MLA இரா. மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட கர்நாடக மாநில தமிழர் முன்னேற்றக் கழகம் பொதுச் செயலாளர் கவிஞர் ஆ.சு. விசுவநாதன், இருமொழி கவிஞர் ஜே. ரமணன் ஆகியோருக்கு கவிஞர் இரா. எழிலரசு அவர்கள் பரிசுக் கேடயங்கள் வழங்கி கௌரவித்தார்.

REGISTERED NEWSPAPER

கு

நினைவு பரிசுகளோடு கர்நாடக தமிழ்ச்சான்றோர்!



இடமிருந்து திரு. வெங்கிடாசலம் இதயகீதம் தலைவர், திண்டுக்கல், கவிஞர் ஆ.சு. விசுவநாதன், பொதுச் செயலாளர், கர்நாடக மாநில தமிழர் முன்னேற்றக் கழகம், கவிஞர் ஜே. ரமணன், பெங்களூர் தமிழ்ச் சங்கம், முனைவர் முத்தையா, கிராமிய பல்கலைக் கழகம், காந்திகிராமம்.

Owned, Edited, Published and Printed by K. M. Ramaratnam in his Uravu Achagam at 33, Ajaj Mukerji Road, Karumalai Chetty Palayam, Coimbatore-641 007, Tamil Nadu. Editor : Kundram Mu. RAMARATNAM

படிப்பகம்